கமலாலயச் சிறப்பு வெளியீடு—3

▽

ஸ்ரீபுரம் என்னும் திருவாரூர்

# ஸ்ரீ கமலாம்பிகையம்மன்மீது

ஷியூர்

ஸ்ரீமான் முத்துஸ்வாமி தீக்ஷிதர் அவர்களால்

இயற்றப்பட்ட

# நவாவரண கீர்த்தன விமர்சம்

இது

பிக்ஷாண்டார்கோவில் பண்ணையாளர்

திரு. கோ. இராஜகோபால் பிள்ளையவர்கள்

விருப்பத்திற்கிணங்க

▽

சென்னை ஸ்ரீ குஹானந்த மண்டலி ஸ்தாபகர்

பிர்ம்மஸ்ரீ அருட்கவி அபிநவ பாஸ்கர

ந. சுப்ரமண்ய அய்யரவர்களால்

இயற்றப்பட்டது.

மன்மத-ஹு மகரஸங்க்ரமணம்.

14—1—1956.

ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்,
ஸ்ரீரங்கம்.

# முகவுரை.

ராக, தாளங்களின் அமைப்பினுலும், அழகாலும் ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதரின் கீர்த்தனங்கள் இசையுலகில் தலை சிறந்து நிற்பது ஒருபுறமிருக்க, அவற்றின் பொருளின் பெருமையால் அவை பக்தி, யோகம், வேதாந்தம், மந்த்ர சாஸ்த்ரம் இவற்றில் ஈடுபட்டவருக்கும் ஆராய்ச்சி நடத்துவோருக்கும் மேலான துணையாயிருப்பது அக்கீர்த்தனங்களுக்கு தனித்ததோர் ஏற்றத்தைத்தருகின்றன. தீக்ஷிதர் நாடெங்குமுள்ள ஸ்தலங்களுக்கு யாத்திரைசெய்து, அங்கங்கே கோயில் கொண்டெழுந்து தமிழ்நாட்டை அருள் நாடாய்ச் செய்யும் தைவங்களைப்பாடிய பெரும் தொண்டை நினைக்குங்கால் இவர் அறுபத்து நான்காவது நாயன்மாரோ, புது ஆழ்வார்தானே, இல்லை ஸர்வ தைவ ஸமரஸத்திற்கென்று நாயன்மாரும், ஆழ்வாரும் அருணகிரியும் திரண்டெழுந்ததோர் அருள்வடிவமோ எனத் தோன்றும். மாயை, விகளேபரகைவல்யம், அஷ்டாங்கயோகம், ச்ரவண, மனன, நிதித்யாஸனங்கள் முதலியவற்றை கிருதிகளில் கொட்டும்போது, "கேலதி ப்ரம்மாண்டே", "ஹம்ஸஸ் ஸோஹம்" என்று பாடிய ஸதாசிவப்ரம்மத்தின் நினைவு வராதாருமிரார்.

பக்திப்பாடல்களையும், வேதாந்தப்பாடல்களையும் பலர் பாடி இருக்கின்றனர். தீக்ஷிதர் இசையின்

வாயிலாக செய்த பணியில் இவற்றைவிட மேலான தான சிறப்பொன்று இருக்கிறது. மந்த்ர சாஸ்த்ரம், ஸ்ரீ வித்யை–இவை மறைபோன்ற மறைபொருள். அவற்றில் தீக்ஷைபெற்றவரே அவற்றுள் நுழையலாம். ஆனால் அம்மந்த்ரசாஸ்த்ரக் கருத்துகள், அவ்வழிபாட்டின் விவரங்கள்–இவற்றையெல்லாம் பொதுமக்களும் அடையவேண்டுமென்று தீக்ஷிதர் தம் கீர்த்தனங்களில் இவற்றை அமைத்து எல்லோரும் பாடிப்பயனடையும்படி செய்துள்ளார். நவக்ரஹங்கள், ராஜகோபாலன், கணபதியின் பல அவஸரங்கள் இவற்றைப் பற்றி தீக்ஷிதர் இசைத்துள்ள உருப்படிகள் அந்தந்த மூர்த்திகளுக்காக மந்த்ர சாஸ்த்ரத்தில் காணப்படும் த்யான ச்லோகங்களோவென அமைந்திருப்பதால், இவற்றைப் பாடுவது அந்தந்த மூர்த்திகளை ஆவாஹனம் செய்துகொள்வது போலாகும்.

ஸ்ரீ வித்யையில் தீக்ஷிதரவர்களுக்கு தனி அதிகாரம்; அதில் இளமையிலேயே குரூபதேசம் ஏற்பட்டு, ஸம்பிரதாயத்தையொட்டி தீக்ஷாநாமாவையும் ஏற்று, இடைவிடாது அந்த முறைப்படி தேவீபூஜையையும் செய்து வந்தார். தனக்களித்த இசைத்திருவை, எல்லா இசைக்கும், திருவுக்கும் பிறப்பிடமாயிருக்கும் ஸங்கீத சியாமளையும் ராஜமாதங்கியுமான பராசக்திக்கே அர்ப்பணம் செய்தார். தாந்த்ரிக பூஜையில் தனக்கும் மற்றவருக்கும் உதவுமாறு தேவியின் நவாவரணகிருதிகளை ஆக்கினார். தேவீ–நவாவரண க்ருதிகளில் ஆரூரில் தவமிருக்கும் கமலாம்பாளைப்பற்றிய

தொடர் ஒன்றையும், மாயூரம் அபயாம்பிகையைப் பற்றிய மற்றொரு தொடரையும் இயற்றினார்.

'ஹ்ருத்—கமலா—நகர' என்று தீக்ஷிதர் பாடியிருக்கும் கமலை ஸாதகரின் ஹ்ருதயகமலமாகும். 'ஸ்ரீபுரம்' என்று வழங்கும் ஆரூர் தேவியின் இருப்பிடமான ஸ்ரீ நகரமாகும். தன் மடியில் பிறந்தார்க்கெல்லாம் மறு பிறப்பற்ற வீட்டையளிக்கும் அன்னையான ஆரூர் பெற்றெடுத்த தீக்ஷிதர் ஜகன்மாதாவின் அருளை தான் அடைந்ததுமல்லாமல், பண்டித—பாமர—மயமான உலகனைத்தும் உய்யுமாறு அவ்வருளை நாதவடிவாக்கி, நாவிருந்தவன் செவியிருந்தவன் எவனும் பிழைத்துப்போகட்டுமென்று வழங்கிப்போனார்.

தீக்ஷிதரின் மந்த்ர கர்பமான கிருதிகளை ஸ்ரீ வித்யையை நன்குணர்ந்தவரே ஸரிவர விளக்கமுடியும். இவ்வரிய தொண்டை வெகுகாலமாய் ப்ரம்மவித்யா விமர்சினி ஸபையின் மூலம் ஸ்ரீ வித்யையில் அறிவையும் சிரத்தையையும் ஊட்டிவரும் ஸ்ரீ ஸுப்ரமண்ய அய்யரவர்கள் இந்நூலில் ஆற்றியிருக்கிறார்கள். இந்நூலில் கமலாம்பாள் நவாவரணகிருதிகள் ஒன்பதும், முதலில் தியான கிருதியுடனும் முடிவில் மங்களகிருதியுடனும் தரப்பட்டிருக்கின்றன. தேவநாகரி லிபியில் ஸம்ஸ்கிருத ஸாஹித்யமும், தமிழில் விளக்கமும் தரப்பட்டிருக்கின்றன. விளக்கத்தில் உருப்படிகள் முழுதும் நன்கு ஆராயப்பட்டு ஸ்ரீ வித்யையின் நுட்பங்களுடனும் சக்ரங்களுடனும் கொடுக்கப்பட்டிருக்கின்

றன. மேலும் கமலாம்பாள் மாஹாத்ம்யம், தீக்ஷிதரின் சரித்ரம் தேவீதத்வம் இம்மூன்றும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீ வித்யை தென்னுட்டில் ஆதிசங்கரர் முதற்கொண்டு அத்வைதத்தின் ஸாதன சாஸ்திரமாகவே கையாளப்பட்டு வந்திருக்கிறது. அம் முறையைத்தான் பாஸ்கரராயர் தம் நூல்களைக்கொண்டு வளர்த்தார். இதே அத்வைதக் கொள்கையை அடிப்படையாக தீக்ஷிதரும் கொண்டிருந்தார் என்பது

"श्रीगुरुगुहस्य दासोऽहं, नो चेत् चिद्गुरुगुह एवाहम्"

முதலிய தீக்ஷித கிருதிகளிலுள்ள அடிகளிலிருந்து தெளிவாகும்.

நம் இசையை ஆக்கிய பெரியோர்கள் அனைவரும் பக்தியினுலும் பரம்பொருளின் அனுபவத்தாலும் தூண்டப்பட்டு பாடியவர்கள். அப்படியே இசைக் கலையைக் கையாளும் தற்போதிய இசையாளரும் தம் பாட்டு ச்ருதியிலிருந்து விலகினுல் எப்படி விரஸம் ஆகுமோ, அப்படி பக்தியிலிருந்து விலகினுலும் விரஸமாகும் என்பதை மனதில் வைத்துக்கொண்டு தீக்ஷிதர் போன்ற மஹான்களின் பாடல்களைப் பாடவேண்டும். மனவமைதிக்கும் ஸமாதிக்கும் உதவும் நவாவரணம் போன்ற கிருதிகளை நன்கு உணர்ந்து பாடுவதற்கு, இதுபோன்ற வெளியீடுகள் பாடகருக்கும் பேருதவியை அளிக்கும்.

இந்த நூலை எழுதும்படி செய்து இதை வெளி யிட்டவரைப்பற்றி நான் அதிகமாக ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. நம் பண்டை மரபுகளில் விடா ஈடு பாடும், இலக்கியத்தையும் கலையையும் வழிபாட்டி னின்று வழுவாவகையில் வளர்க்கும் ஊக்கமும் கொண்டுள்ள பிக்ஷாண்டார்கோயில் பிள்ளையவர்களை யும் என்னையும் மேற்சொன்ன இயல்புகள்மட்டுமல்லா மல் நாங்கள் இருவரும் ஒரே ஆரூர் பிறந்தார்கள் என்ற பாசமும் சேர்த்துக்கட்டியிருக்கிறது. இந்த இனிய பாசத்திற்குட்பட்டே அவருடைய பணியில் அவ்வப்போது இவ்வுரையெழுதுவதுபோன்ற சிறு பங்குகள் கிட்டும் பேற்றை நானும் பெற்றிருக்கிறேன்.

ஸர்வகலாசாலை
சென்னை
14-1-56, மகர-ஸங்கிரமணம்.

வே. ராகவன்



# பூமிகை

ஸ்ரீமான் முத்துஸ்வாமி தீக்ஷிதர் அவர்கள் இயற்றியருளிய "**கமலாம்பிகா நவாவரண கீர்த்தனை விமர்சம்**" என்னும் இச்சிறு நூல், ஸ்ரீபுரம் என்னும் திருவாரூர் கமலாம்பிகா மஹாத்மியமென்னும் ஒரு நூலின் அந்தர்கதமான ஒரு பகுதியேயாகும். இதில் நவாவரண கீர்த்தனைகளின் தாத்பர்ய விமர்சம், ஸ்ரீ வித்யா சாஸ்திர ஸம்பிரதாயத்துக்குச் சற்றும் முரண்பாடின்றிச் செய்யப்பட்டுள்ளது.

ஸங்கீத கலைக்கு பாவம் பிராணரூபமானது. கீர்த்தனைகளின் ஸாஹித்யத்திலுள்ள ஒவ்வொரு

பதத்திற்கும் அர்த்தம் தெரியாமல் ஸாஹித்ய ஹாவஸ்பூர்த்தியுண்டாகாது. ஆதலின், ஸங்கீதக் கலையில் பயிலும் ஒவ்வொருவருக்கும் இச் சிறுநூல் மிக்கபயன் தரும் எனக்கருதி, இப்பாகத்தைத் தனியாய் வெளியிட நேர்ந்தது. இதில் பரதேவதையின் உபாஸனாதர்ம ஸூக்ஷ்மங்களும், அத்வைத சாஸ்திர ஸித்தாந்த ரஹஸ்யங்களும் நிரம்பியுள்ளன.

சிறு நூலாகிய இதனை நுண்ணுணர்வோடு ஊன்றி வாசிப்பதனாலேயே ஸ்ரீ வித்யோபாஸ்தியின் தத்துவத்தை நன்குணர்ந்து சிந்தையும் மொழியும் செல்லாச் சிவபதமெய்தலாம்.

லோகோபகாரமாக இதனைத் தமது பொருட் செலவில் அச்சிட்டு வெளியிட்ட ஸ்ரீமான் பிக்ஷாண்டார்கோயில் பெரும் பண்ணையார் G. **ராஜகோபால் பிள்ளை** அவர்களின் மாட்டு, தமிழுலகமும், உபாஸக லோகமும், ஸங்கீத உலகமும் என்றென்றைக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டனவாகும்.

சிவம்

ஸ்ரீ குஹாநந்தமண்டலி,
சென்னை—16.
10—1—56.

இங்ஙனம்,
விதேயன்,
**N. சுப்பிரமண்ய அய்யர்.**



Sri Muthuswami Dikshitar

1776—1835

## ஸ்ரீதீக்ஷிதர் இயற்றியருளிய ஸ்ரீபுரகமலாம்பிகா நவாவரண கீர்த்தனு விமர்சம்

ஸ்ரீபுரம் என்பது திருவாரூர்: ஸ்ரீநகரம், கமலா லயம், தேவயாகபுரம், கல்யாண நகரம் என்பன ஒரு பொருட்சொற்களாகும். கமலாம்பிகையே காமகலை யல்லது சித்சக்தி, லலிதை, மஹாத்ரிபுரஸுந்தரி யென்று முன் கூறப்பட்டது. ஸ்ரீலலிதாம்பிகை அதிஷ் டித்து விளங்கும் சக்கிரம் ஸ்ரீசக்ரமாகும்.

### ஸ்ரீ சக்ரத்தின் ஸ்வரூபம்

विन्दुत्रिकोणवसुकोणदशारयुग्म-
मन्वश्रनागदलषोडशपत्रयुक्तम् ।
वृत्तत्रयं च धरणीसदनत्रयं च
श्रीचक्रराज उदितं परदेवतायाः ॥

(இதன் பொருள்) பிந்து, த்ரிகோணம், அஷ்ட கோணம், இரண்டு தசகோணங்கள் (உள்-வெளி) பதினன்கு கோணம், அஷ்டதளபத்மம், பதினறு தள பத்மம், மூன்று வ்ருத்தங்கள், பூபுரமென்னும் மூன்று சதுரச்ரங்கள் இவைகள் சேர்ந்து விளங்குவது ஸ்ரீசக்ர ராஜமென்பதாம். இது பரதேவதையாகும் லலிதா தேவிக்கு உரியதாகும்.

இந்த ஸ்ரீசக்ரத்தில் பிந்து முதல் பூபுரம்வரை ஒன்பது அவாந்தரசக்ரங்களுண்டு. அவையாவன :—

1. பிந்து—ஸர்வாநந்தமயம்.

2. த்ரிகோணம்—ஸர்வஸித்திப்ரதம்.
3. அஷ்டகோணம்—ஸர்வரோகஹரம்.
4. உள்தசாரம்—ஸர்வரக்ஷாகரம்.
5. வெளித்தசாரம்—ஸர்வார்த்தஸாதகம்.
6. மங்வச்ரம்—ஸர்வஸௌபாக்யதாயகம்.
7. அஷ்டதளம்—ஸர்வஸம்க்ஷோபணம்.
8. ஷோடசதளம்—ஸர்வாசாபரிபூரகம்.
9. பூபுரம்—த்ரைலோக்யமோஹனம்.

மேற்கூறிய ஒன்பது சக்ரங்களிலும் விளங்கும் தேவதைகளுக்கு **ஆவரண தேவதைகளென்றும்,** ஒவ்வொரு ஆவரண சக்திகளுக்கும் யஜமானியாய் விளங்குபவளுக்கு **சக்ரேச்வரி** யென்றும், இந்த ஒன்பது சக்ரேச்வரிகளும் ஆவரண சக்திகளும் பிந்துவில் அதிஷ்டித்து விளங்கும் ஸ்ரீலலிதாமஹாத்ரிபுரசுந்தரீ தேவியின் கிரணங்களேயென்றும் உபநிஷத்துக்களும் ஸ்ரீ வித்யாதந்த்ரங்களும் கூறுகின்றன.

இங்ஙனம் ஒன்பது ஆவரணங்களையும் அவற்றிலுள்ள ஆவரண தேவதைகளையும், சக்ரேச்வரியையும், யோகினி முத்ராதேவி, ஸித்திதேவி முதலிய விஷயங்களைப்பற்றியும் மற்றும் சில தத்வ விஷயங்களைப் பற்றியும் விமர்சித்து, ராக தாளங்கள் பொருந்த ஸாஹித்யமாக இயற்றப்பட்டவையே நவாவரண கீர்த்தனைகளாகும். ஸம்ஹாரக்கிரமமாக ஆராதிக்கும் முறையை ஒட்டிப் பூபுரத்தை முதலாவது ஆவரண

மாகவும் பிந்துவை ஒன்பதாவது ஆவரணமாகவும் சாஸ்திரங்களில் கூறியுள்ளபடி ஆவரண கீர்த்தனைகள் ஒன்பதாக அமைந்துள்ளன. இவற்றிற்கும் முதலாவதாக அம்பிகையின் தியான கீர்த்தனை ஒன்று, நவாவரண கீர்த்தனைகள் ஒன்பது ஆக பத்து கீர்த்தனங்களின் விமர்சம் கண்டு செய்யப்படும்.

### முதலாவது தியான கீர்த்தனம்

ராகம் : தோடி  தாளம் : ரூபகம்

பல்லவி

कमलाम्बिके आश्रितकल्पलतिके चण्डिके
कमनीयारुणांशुके करविधृतशुके
मामव जगदम्बिके

அனுபல்லவி

कमलासनादिपूजितकमलपदे बहुवरदे
कमलालयतीर्थवैभवे शिवे करुणार्णवे (कमला)

சரணங்கள்

सकललोकनायिके संगीतरसिके
सुकवित्वप्रदायिके सुन्दरि गतमायिके
त्रिकलेबरमुक्तिदाननिपुणे अघहरणे
वियदादिभूतकिरणे विनोदचरणे अरुणे
सकले गुरुगुहकरणे सदाशिवान्तःकरणे
अ क च ट त पादिवर्गे अखण्डैकरसंपूर्णे (कमलाम्बिके)

(இதன் பொருள்) அநந்யமாய்த் தன்னைச் சரண் புக்கவர்களுக்குச் சகலஅபீஷ்டங்களையும் அருளும் கற்பகக் கொடியே! சண்டிகாஸ்வரூபமாய் உள்ளவளே! அழகொழுகும் செம்மை நிறச் சேலையுடுத்தியவளே, கிளியைத்தரித்த கைம்மலருடையவளே, ஜகதம்பிகையாகும் கமலாம்பிகையே என்னைக் காப்பாயாக.

பிரஹ்மா முதலிய தேவர்களால் பூஜிக்கப்பட்ட சரணாரவிந்தங்களை யுடையவளே! வெகு விதமான வரங்களையருள்பவளே, கமலாலய தீர்த்தத்திற்கு ஒப்புயர்வற்ற மஹிமையைத் தந்தவளே, சிவமாகும் மங்கள ஸ்வரூபியே, கருணைக்கடலே (கமலாம்பிகையே என்னைக் காப்பாயாக).

ஸகல லோகங்களுக்கும் நாயகியே, ஸங்கீத சாஸ்திரமாகுங்கனியின் ரஸரூபமாயுள்ளவளே, நல்ல கவித்வத்தை அருள்பவளே, மாயைக்கு அதீதமாயுள்ள சுந்தரியே, விதேஹ முக்தியை யருளுவதில் வல்லவளே, பாபங்களையெல்லாம் ஒழிப்பவளே, ஆகாசாதி பூதங்களைக் கதிர்களாக வுடையவளே, மனோஹரமான சரணங்களை யுடைத்தாய், செந்நிறத்தோடு விளங்குபவளே, சகள வடிவினளே, குருவாகுங் குஹக்கடவுளின் தோற்றத்திற்குக் காரணமானவளே, ஸதாசிவ ஸ்வரூபத்தின் அந்தக்கரணமாய் விளங்குபவளே, அ. க. ச. ட. த. ப. என்பனவாதி வர்க்கங்களோடு கூடிய ஐம்பத்தொரு, மாத்ருகாவர்ண ஸ்வரூபிணியே, அகண்டமாயும், ஏகரஸமாயும், பரிபூர்ணமாயுமுள்ள (கமலாம்பிகையே என்னைக் காப்பாயாக) என்பதாம்.

**(விசேஷவுரை) காமகலா** ஸ்வரூபிணியாகும் கமலாம்பிகையின் நிர்க்குண ஸ்வரூபமும், ஸகுண நிரா காரம், ஸகுண ஸாகாரம் முதலிய வடிவங்களும் இந்தக் கீர்த்தனத்தில் விமர்சிக்கப்பட்டுள்ளன.

1. **நிர்க்குணம்:**—மாயாதீதத்துவம், அகண்ட, ஏகரஸ, பூர்ணத்துவங்கள்.

2. **ஸகுண நிராகாரம்:**—சிவசக்தி ஸ்வரூபம், சண்டிகா ஸ்வரூபம், ஸௌந்தரி, ஸகளம், ஜகதம்பிகை, ஸகல லோக நாயிகை, அருணை, கருணார்ணவம் முதலிய நாமாக்கள்.

3. **ஸகுண ஸாகாரம்:**—கமலாஸனாதி பூஜித கமலபதம், விநோத சரணம், வியதாதிபூதகிரணை, கர வித்ருதசுகை, ஸங்கீத ரஸிகை, ஸதாசிவ அந்தக்கரண வடிவை, கமலாலய தீர்த்தவைபவை.

4. **மந்த்ரரூப ஸூக்ஷ்ம வடிவம்:**— அ க ச ட த ப ஆதி ஐம்பத்தோரக்ஷர ஸ்வரூபம்.

5. **அருள் வடிவம்:**— கருணார்ணவம், ஆச்ரித கல்பலதிகை, பஹுவரதை, ஸௌகவித்வப்ரதாயிகை, விகளேபரமுக்திதான நிபுணத்துவம், அகஹரணத் துவம் முதலியன.

**ஸதாசிவாந்தஃகரணே:**— சிருஷ்டியாதி பஞ்ச கிருத்தியங்களில் அநுக்கிரஹ கர்த்தாவாகும் ஸதா சிவத்தின் அந்தஃகரணத்தில் த்யேயரூபமாயும் அதிஷ்டானரூபமாயும் விளங்குபவள்.

**குருகுஹ சரணே** :—பரமசிவனுக்குப் பிரணவப் பொருளை மழலை மொழியால் உபதேசித்த சிவகுருவாகிய குஹப்பெருமான் அவதாரத்திற்குக் காரணமானவளே அல்லது, திருத்தணிகேசனாகிய ஸ்ரீ குஹப் பெருமானை அடியேனுக்குக் குரு ஸ்வரூபமாகச் செய்தவளே. இதன் வரலாறுவது :—

ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் தமது இரண்டு ஸஹோதரர்களுடன் திருத்தணிக்குச் சென்று சரவணப் பொய்கையில் ஸ்நானநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு முருகன் தரிசனத்தின் பொருட்டு மலையேறுகையில், வழியில் ஸ்ரீ குஹப்பெருமான் ஒரு வயோதிக வுருவத்தோடு தீக்ஷிதர் முன்தோன்றி "முத்துஸ்வாமி வாயைத்திற" என்று திருவாய் மலர்ந்து தீக்ஷிதர் வாயில் கற்கண்டுத்துண்டொன்றைப் போட்டு மறைந்தனர். தீக்ஷிதர் உடனே எதிரில் நின்ற விருத்தரைக் காணேமே என்று பிரமித்துப் பார்க்கையில் ஷண்முகன் ஸ்ரீ வல்லீதேவஸேனு சக்திகளோடு மயிலின் மீதமர்ந்து தரிசனம் தந்தனர். தீக்ஷிதர் மெய்ம்மறந்து ஆநந்தக்கண்ணீர் பெருகவும் சரீரம் புலகாங்கிதமாகவும் **"ஸ்ரீ நாதாதி குருகுஹோ ஜயதி"** என்னும் கீர்த்தனத்தைப்பாடினுர். இதுதான் தீக்ஷிதர் அவர்கள் முதல் முதலாக அருளிய கீர்த்தனம். தீக்ஷிதர் அவர்களுக்கு ஸ்ரீவித்யாதீக்ஷை செய்த குரு **ஸ்ரீ சிதம்பரா நந்தநாதரும்**, அதிமதுர ஸாஹித்ய லஹரிக்கு குரு **ஸ்ரீ குஹப்பெருமானும்** ஆவர். ஆதலால்தான் தீக்ஷி

தர் தமது கீர்த்தனைகளில் **குருகுஹ** முத்திரை தந்திருக்கின்றனர் என்று அறியத்தக்கது.

**விகளேபரமுக்தி** என்பது விதேஹ முக்தியென்று பொருள்படும். ஜீவன்முக்தி, விதேஹ முக்தி என்று மோக்ஷநிலையை இரண்டுவிதமாய்ச் சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஸந்தேஹ விபரீதங்களற்ற அத்வைத ஞானம் ஏற்பட்ட பிறகு சரீரம் சிலகாலம் இருக்கும். அக்காலத்தில் அத்வைத ஞானத்தின் தார்ட்டியத்தால் ஸ்தூல ஸூக்ஷ்ம காரண சரீரங்களில் தான் என்னும் மயர்வும் தனது என்னும் அபிமானமும் இன்மையால், ஜீவன் முக்தி நிலையும் விதேஹ முக்தியென்றே கூறத்தகும். பிறருடைய திருஷ்டியில் ஆரூடஞானிக்குச் சரீரம் உள்ளதுபோலத் தோன்றும். ஞானியின் சரீரம் நழுவிய காலத்தில் விதேஹ முக்தியென்பது பிரசித்தம். இத்தகைய முக்தியைத் தருபவள் என்பது பொருள். மோக்ஷம் தானுர்ஹமான தன்று; மற்றோ ஞானம் ஒன்றினாலேயே உணரத்தக்கதென்பது சாஸ்திர சித்தாந்தமாகும். ஆதலின் **முக்திதானநிபுணே** யென்பதற்கு மோக்ஷத்திற்கு ஸாக்ஷாத் ஸாதனமான ஜீவப் பிரஹ்மைக்ய ஞானத்தை யருள்பவள் என்றே பொருள்செய்தல் தகுதியாகும்.

இந்த கீர்த்தனம் கமலாம்பிகா நவாவரண கீர்த்தனைகளுக்கு மங்களாசரணமா(காப்பா)கக் கூறப்பட்டுள்ளதென்பது ஸம்பிரதாயமாகும்.

## முதலாவது ஆவரணம்.

மூன்று சதுரங்களோடு கூடியதும், திரைலோக்ய மோஹன சக்கிரம் என்னும் பெயரையுடையதுமானது முதல் ஆவரணம் ஆகும்.



ஸ்ரீசக்கிரமானது சிருஷ்டிக் கிரமத்தில் பிந்து முதல் பூபுரம் ஈருக ஒன்பது சக்கிரங்களை யுடையதென்றும், அதன் தத்துவம் பரசிவத்தால் சிருஷ்டிக்கப்பட்ட பிரஹ்மாண்ட பிண்டாண்ட வடிவமாயுள்ளதென்றும் கூறத்தகும். ஆனல் பூஜை செய்யும்

கிரமமோ பூபுரம் முதல் பிந்து சக்கிரம் ஈருக ஒன்பது ஆவரணங்களாகக் கணக்கிடப்பட்டு அதன்படியே சிஷ்டாசாரத்தில் ஆராதனையும் நடந்துவருகின்றது. ஸம்ஹாரக் கிரமமாக இயற்றும் ஆராதனையின்படி ஸ்ரீ சக்கரத்தின் தத்துவம் சுத்த ஸத்துவப் பிரதானமும் அதனுல் மலரஹிதமும் ஆன அந்தஃகரணமே யென்றும், ஸ்ரீ சக்கரத்தின் ஒன்பது அவாந்தர சக்கிரங்கள் அம்மனத்தின் நிலை அல்லது அவஸ்தை அல்லது ஸ்திதி யென்றும், ஸ்ரீ சக்ரத்தில் விளங்கும் ஆவரண தேவதைகள் அந்த அந்த அவஸ்தை அல்லது நிலையிலுள்ள அம்மனத்தின் விருத்திகளேயாமென்றும் சாஸ்திரங்கள் ரகசியமாய்க் கூறுகின்றன.

அவற்றின் சுருக்கமான விளக்கமாவது :—

1. பூபுரம்—ப்ரகடயோகினி—ஜாக்ரம்
2. ஷோடசதளகமலம்—குப்தயோகினி—ஸ்வப்னம்
3. அஷ்டதளபத்மம்—குப்ததரயோகினி—ஸுஷுப்தி
4. பதினுன்கு முக்கோணம்—ஸம்ப்ரதாய யோகினி—ஈச்வரவிசாரம்
5. வெளித்தச கோணம்—குளோத்தீர்ண யோகினி—குருபஸதனம்
6. உள்தசகோணம்—நிகர்ப்ப யோகினி—உபதேசம்
7. அஷ்டகோணம்–ரஹஸ்ய யோகினி–மனனம்

8. மத்தியத்ரிகோணம்—அதிரஹஸ்ய யோகினி—
நிதித்யாஸனம்

9. பிந்து—பராபராதிரஹஸ்யயோகினி—
ஸவிகல்பஸமாதி

## முதலாவது ஆவரண கீர்த்தனை

ராகம்: ஆனந்த பைரவி    தாளம்: திரிபுடை

பல்லவி

कमलाम्बा संरक्षतु मां हृत्कमलनगरनिवासिनी

அநுபல்லவி

सुमनसाराधिताब्जमुखी सुन्दरमनःप्रियसखी
कमलजानन्दबोधसुखी कान्तारपञ्जरशुकी (कमला)

சரணம்

त्रिपुरादिचक्रेश्वरी अणिमादिसिद्धीश्वरी-नित्यकामेश्वरी
क्षितिपुरत्रैलोक्यमोहनचक्रवर्तिनी प्रकटयोगिनी
सुररिपुमहिषासुरादिमर्दिनी निगमपुराणादिसंवेदिनी
त्रिपुरेशी-गुरुगुहजननी त्रिपुरभञ्जनरञ्जनी
मधुरिपुसहोदरी तलोदरी त्रिपुरसुन्दरी महेश्वरी (कमला)

(இதன் பொருள்) அடியேனது ஹ்ருதயத்திலும், கமலாலயமென்னும் திருவாரூரிலும் வஸிப்பவளும், தேவதைகளாலும், தூய மனத்தையுடைய ஞானிகளாலும் ஆராதிக்கப்படுபவளும் செந்தாமரையையொத்தமுகமுடையவளும், ஸுந்தரரென்னும் காமேச்

வரருடைய மனத்திற்குப் பிரிய ஸகியானவளும், பிரஹ்மாநந்த வடிவ மோக்ஷ நிலையை உணர்தற்கு ஸாக்ஷாத் ஸாதனமான தத்துவ ஞானத்தை, அநர்த்தங்களாகும் அஞ்ஞானத்தையும் அதன் கார்யங்களையும் நிவர்த்தி செய்வதன் மூலமாய் அருள்பவளும்,

(सुखी=सुष्टु खनति अशुभमिति सुखं । खनु अवदारणे)

அசுபங்களாகும் அநர்த்தங்களை ஒழிப்பவள்) பிரணவமாகும் கூட்டில் வஸிக்கும் ஸ்வயம்பிரகாசப் பெண் கிளி வடிவினளும், த்ரிபுரை, த்ரிபுரேசீ முதலிய ஒன்பது சக்ரேச்வரிகள் வடிவினளும், அணிமா முதலிய பத்து ஸித்திகள், ப்ராஹ்மீ முதலிய எட்டு மாத்ரு சக்திகள், ஸர்வ ஸம்க்ஷோபிணி முதலிய பத்து முத்ரா சக்திகள் ஆக இருபத்திஎட்டு சக்திகளுக்கும் நாயகியும், காமேச்வரி, பகமாலினி முதல் சித்ரா வரையில் உள்ள பதினைந்து நித்யாதேவி ஸ்வரூபிணியும், பூபுரமாகும் திரைலோக்ய மோஹந சக்ரத்தில் வஸிப்பவளும், பிரகடயோகினியும் தேவதைகளின் சத்ருவாகிய மஹிஷாஸுரன் முதலியவர்களை வதம் செய்தவளும், வேதாகம புராணுதிகளால் உணர்த்தப்படுபவளும், த்ரிபுரேசியும் குருநாதரான குஹக் கடவுளின் தாயாரும் த்ரிபுராரியாகும் காமேச்வரனை ரஞ்சிப்பவளும், மதுஸூதனனது ஸஹோதரியும், உள்ளங்கை போன்ற வயிறுடையவளும், ஸ்தூல ஸூக்ஷ்ம, காரண சரீரங்களின் அதிஷ்டான வடிவினளும், மஹேச்வரியும் ஆன கமலாம்பிகை என்னை ரக்ஷிக்கட்டும்.

(விசேஷவுரை) இந்த கீர்த்தனையிலுள்ள பர தேவதையின் நாமங்கள் எல்லாம் முதல் வேற்றுமை யில் உள்ளனவாகும். கமலாநகரம்=ஸ்ரீபுரம் அல்லது திருவாரூர். கமலஜஆநந்தம்=பிரஹ்மாநந்தம். இது சதுர்முகப் பிரஹ்மாவாகும் பிரஜாபதியின் ஆநந்தம் அல்லவென்பது உணரத்தக்கது. பிரம்மனுடைய ஆநந்தம் ஸாபேக்ஷிக ஆநந்தமாகும். இத்தகைய ஸாபேக்ஷிக ஆநந்தங்கள் பதினொருவிதம் என்று தைத்திரீய உபநிஷத்து கூறுகின்றது. அவைகள் யாவும் நாசத்தோடு கூடியவை. பிரஹ்மாநந்தமோ ஸத்சித் ஸ்வரூபமானது. சிந்தையும் மொழியும் செல்லா நிலை. இதையுணராமல் உணர தத்துவ ஞானம் அவசியம். அபேதவுணர்வுதான் உண்மை அறிவு. போதமென்பதும் இதுவே. உண்மைப்போத மும் நித்திய ஆநந்தமும் அஞ்ஞானத்தின் மயர்வால் மறைபட்டு விஷய ஆநந்தமாகவும் விஷய அறிவாக வும் விளங்குகின்றன. இந்த மறைவாகிய அநர்த் தத்தை அறவே ஒழித்து உண்மை ஆநந்தத்தையும் உண்மை அறிவையும் தருபவள் ஆதலின் கமலஜ ஆநந்த போதஸுகீ என்று தீக்ஷிதர் அருளுகின்றார்.

कान्तातारपञ्जरशुकी = **காந்தை** — (வச காந்தௌ) என்னும் பொருள்பற்றி யாவராலும் விரும்பப்படுவது. **தாரம்**=பிரணவம் **பஞ்சரம்**=கிளிக்கூண்டு **சுகி**=பெண்கிளி. பிரணவமாகும் கூட்டில் வசிப்பதும் யாவராலும் விரும்பப்படுவதுமாகிய (அழகிய) பெண் கிளி.

त्रिपुरादिचक्रेश्वरी = 1. த்ரிபுரா, 2. த்ரிபுரேசீ, 3. த்ரிபுர ஸுந்தரி, 4. த்ரிபுரவாஸினீ, 5. த்ரிபுராஸ்ரீ, 6. த்ரிபுர மாலினீ, 7. த்ரிபுராஸித்தா, 8. த்ரிபுராம்பா, 9. மஹா த்ரிபுரஸுந்தரி என சக்ரேச்வரிகள் ஒன்பது பேர். இவர்கள் முறையே 1. த்ரைலோக்ய மோஹனம் 2. ஸர்வாசாபரிபூரகம், 3. ஸர்வஸம்க்ஷோபணம், 4. ஸர்வஸௌபாக்யதாயகம், 5. ஸர்வார்த்தஸாதகம், 6. ஸர்வரக்ஷாகரம், 7. ஸர்வரோகஹரம், 8. ஸர்வஸித்திப்ரதம், 9. ஸர்வாநந்தமயம் என்னும் பெயர்களையுடைய சக்கரங்களுக்கு நாயகிகளாவர்.

अणिमादिसिद्धीश्वरी = அணிமா, லகிமா, மஹிமா, ஈசித்வ, வசித்வ, ப்ராகாம்ய, புக்தி, இச்சா, ப்ராப்தி, ஸர்வகாமமென்னும் பத்து ஸித்திதேவதைகளுக்கு யஜமானி.

नित्यकामेश्वरी = காமேச்வரி முதலிய பதினைந்து நித்யாதேவிகளுக்கு அதிஷ்டானமாய் விளங்கும் மஹா நித்யாதேவி.

**பதினைந்து நித்யைகளாவன :—**

| | | | |
|---|---|---|---|
| 1. காமேச்வரீ | நித்யை | 9. குலஸுந்தரீ | நித்யை |
| 2. பகமாலினீ | ,, | 10. நித்யா | ,, |
| 3. நித்யக்லின்னு | ,, | 11. நீலபதாகா | ,, |
| 4. பேருண்டா | ,, | 12. விஜயா | ,, |
| 5. வஹ்நிவாஸினீ | ,, | 13. ஸர்வமங்களா | ,, |
| 6. மஹாவஜ்ரேச்வரீ | ,, | 14. ஜ்வாலாமாலினீ | ,, |
| 7. சிவதூதீ | ,, | 15. சித்ரா | ,, |
| 8. த்வரிதா | ,, | | |

क्षितिपुरत्रैलोक्यमोहनचक्रवर्तिनी प्रकटयोगिनीः—

க்ஷிதிபுரம்=பூபுரம்—மூன்று சதுரங்கள். பஞ்ச பூதங்களில் ஒன்றான பூமிக்கு சக்ரம் நான்கு கோடு களாலாக்கப்பட்ட சதுரம். இங்ஙனம் ஒன்றுக்குள் ஒன்று அடங்கிய மூன்று சதுரங்கள். இந்த மூன்று சதுரங்களும் சேர்ந்தது ஒரு சக்கிரம். இதற்கு **த்ரை லோக்ய மோஹனம்** என்று பெயர். இந்த சக்கிரத் தில் முதல் ரேகையில் அணிமா முதல் பத்து ஸித்தி தேவதைகளும், இரண்டாவது ரேகையில் ब्राह्मी முதல் எட்டு மாத்ரு சக்திகளும், மூன்றாவது ரேகையில் ஸர்வஸம்க்ஷோபணம் முதலிய பத்து முத்ரா தேவதை களும் ஆக இருபத்தியெட்டு தேவதைகள் விளங்கு கின்றனர்.

இந்த சக்திகளுக்கெல்லாம் பொதுவாய்ப் **பிரகட யோகினிகளென்று** பெயர்.

सुरारिपुमहिषासुरादिमर्दिनी =தேவதைகளுக்குப் பகைவர் களாகிய மஹிஷாஸுரன் சும்பநிசும்பர்கள், பண்டா ஸுரன் முதலிய அஸுரர்களை ஸம்ஹரித்தவள்.

त्रिपुरेशी = த்ரைலோக்ய மோஹன சக்கிரமாகிய இந்த முதல் சக்கிரத்தின் ஈச்வரிக்கு திரிபுராசக்கிரேச் வரி என்று பெயர். இந்த திரிபுராவுக்கும் தலைவியா யும் அதிஷ்டானமாயும், ஆத்ம ஸ்வரூபிணியாயும் உள்ள त्रिपुरेशी யாவள்.

गुरुगुहजननी = சிவகுருவாகிய ஸ்ரீ குஹப்பெருமா னுக்குத்தாயார்.

त्रिपुरभंजनरञ्जनी = த்ரிபுரஸம்ஹாரியாகும் பரசிவ னுக்கு ஆநந்தத்தை யருள்பவள்.

मधुरिपुसहोदरी = மதுவென்னும் அஸுரனைச்சம்ஹா ரம் செய்த மஹாவிஷ்ணுவின் ஸஹோதரி.

तलोदरी = கைத்தலம்போல் மெல்லிய வயிறையுடை யவள். இத்தகைய மஹிமைகளையுடைய மஹேச்வரி —திரிபுரஸுந்தரி என்னைக்காக்கட்டும்.

**தத்துவவிமர்சம்** :-இந்த முதல் ஆவரண தேவதை கள் ஜாக்கிராவஸ்தையாகும் நனவில் ஒரு ஜீவனுக் குள்ள மனோவிருத்தி வடிவினரேயாவர். நனவில் யாவும் ஸ்தூலமாயும், ஸ்பஷ்டமாயும் தோன்று கின்றனவாதலின் ஜாக்கிரதவஸ்தா மனோவிருத்திகள் வடிவ ஆவரண தேவதைகளுக்குப் **பிரகட யோகினிகள்** என்று பெயர்.

| | |
|---|---|
| 1. அணிமா முதலிய பத்து ஸித்தி தேவதை கள். | ஒரு ஜீவனுடைய பிரா ரப்தம், சிருங்காரம் முத லிய ஒன்பது ரஸங்கள். |
| 2. பிராஹ்மீ முதலிய எட்டு மாத்ருசக்திகள். | காமம், குரோதம், லோபம், மோஹம், மதம் மாத்ஸர்யம் புண்ணியம், பாபம் என்பன. |
| 3. ஸர்வ ஸம்க்ஷோப ணம் முதலிய பத்து முத்ரா சக்திகள். | மூலாதாரம் முதல் ஆக்ஞை வரை ஆறு சக் கிரங்கள், கீழ் ஸஹஸ்ரா ரம், மேல்ஸஹஸ்ராரம், உள்நாக்கு, இவற்றின் ஸமஷ்டி, ஆக பத்து. |

இங்ஙனங் கூறுவதற்குப் பிரமாணம்:—

१. नियतिश्शृङ्गारादयो रसा अणिमादयः ।

२. कामक्रोधलोभमोहमदमात्सर्यपुण्यपापमया ब्राह्मयाद्यष्ट-शक्तयः ।

३. आधारनवकं मुद्राशक्तयः । (भावनोपनिषत्)

### இரண்டாவது ஆவரண கீர்த்தனை

ராகம்: கல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

कमलाम्बां भज रे रे मानस
कल्पितमायाकार्यं त्यज रे

அநுபல்லவி

कमलावाणीसेवितपार्श्वां कम्बुजयग्रीवां नतदेवां
कमलापुरसदनां मृदुगदनां कमनीयरदनां कमलनयनां
(कमला)

சரணம்

सर्वाशापरिपूरकचक्रस्वामिनीं परमशिवकामिनीं
दुर्वासार्चितगुप्तयोगिनीं दुःखध्वंसिनीं हंसिनीं
निर्वाणनिजसुखप्रदायिनीं नित्यकल्याणीं कात्यायनीं
शर्वाणीं मधुपविजयवेणीं सद्गुरुगुहजननीं
निरञ्जनीं गर्वितभण्डासुरभञ्जनीं कामाकर्षिण्यादिरञ्जनीं
निर्विशेषचैतन्यरूपिणीं उर्वीतत्वादिस्वरूपिणीं (कमला)

(இதன் பொருள்) ஓ மனமே! கமலாம்பிகையை உபாஸித்து கற்பிதமான மாயையையும் அதன் காரியங்களையும் விட்டு ஒழிப்பாய். கமலாம்பாள் எத்தகையளெனின், லக்ஷ்மி ஒருபுறமும் ஸரஸ்வதியொரு புறமும் நின்று அம்பாளுக்குச் சாமரம்வீசி ஸேவைபுரிகின்றனர். அம்பாளின் கழுத்து சங்கத்தை ஜயிப்பதாயுள்ளது. தேவர்கள் நமஸ்கரிக்கின்றனர். கமலாலயமாகும் திருவாரூரை இருப்பிடமாகக் கொண்டவள். மதுரமானதும் மிருதுவானதுமான வாக்கையுடையவள், அழகான பல்வரிசையையுடையவள்; கமலம் போன்ற முகமுடையவள். மற்றும், ஸ்ரீசக்ரத்தில் பதினாறு தளங்களையுடைய **ஸர்வாசாபரிபூரகம்** என்னும் இரண்டாவது ஆவரண சக்கிரத்திற்குத் தலைவி குப்தயோகினி. துக்கங்களை நாசம் செய்பவள் ஹம்ஸஸ்வரூபிணி, துக்கம் கலவாத ஆத்மாநந்த வடிவ மோக்ஷத்தையருள்பவள், பரமசிவ வடிவ காமேச்வரருடைய பத்தினி. துர்வாஸரால் பூஜிக்கப்பட்டவள். அழிவற்ற மங்களஸ்வரூபிணி. காத்யாயனி என்னும் திருநாமத்தையுடையவள், சர்வாணீ. கருமை நிறத்தில் வண்டுகளை ஜயிக்கும் கூந்தலையுடையவள். ஸத்குருவாகும் குஹப்பெருமானுக்குத்தாய். அஞ்ஞானமென்னும் இருளற்றவள், இறுமாப்பையடைந்து (தேவர்களுக்குத் தீங்கிழைத்த) பண்டாஸுரனைச் சம்ஹாரம் செய்தவள். காமாகர்ஷிணி முதலிய பதினாறு ஆவரணதேவதைகளுக்கு ஸந்தோஷத்தைத் தருபவள். நிர்விசேஷசைதன்ய ஸ்வரூபிணி, பிரிதிவி முதல் சிவாந்

தமான முப்பத்தாறு தத்துவஸ்வரூபிணி, இந்த விசேஷணங்களோடு கூடிய பரதேவதையை உபாஸித்தால் ஸர்வ அநர்த்தங்களும் நிவர்த்தியாய் நித்தியாநந்த வடிவ மோக்ஷம் ஸித்திக்கும்.

**விசேஷ விமர்சம்** :—இந்த கீர்த்தனத்திலும் பரதேவதை பல நாமாக்களால் துதிக்கப்படுகின்றனள். அவைகளெல்லாம் இரண்டாவது வேற்றுமையில் அமைந்துள்ளன. அவற்றுள் சில ஸகுண ஸாகாரத்தையும், சில ஸகுண நிராகாரத்தையும், சில நிற்குணஸ்வரூபத்தையும், சில ஸ்ரீசக்ர ஆவரண சம்பந்தத்தையும், குறிப்பிடுகின்றன.

**ஸகுண ஸாகார நாமாக்கள்:—**

कमलावाणीसेवितपार्श्वां, कम्बुजयग्रीवां, कमलापुरसदनां, मृदुगदनां, कमनीयरदनां, कमलवदनां, मधुपविजयवेणीं.

**ஸகுண நிராகார நாமாக்கள் :—**

परमशिवकामिनीं, दुःखध्वंसिनीं, शर्वाणीं, नित्यकल्याणीं, कात्यायनीं, सद्गुरुगुहजननीं, गर्वितभण्डासुरभञ्जनीं, उर्वीतत्वादिस्वरूपिणीं.

**நிர்குணம் :—**

हंसिनीं, निर्वाणनिजसुखप्रदायिनीं, निरञ्जनीं, निर्विशेषचैतन्यरूपिणीम् ।

**ஸ்ரீசக்ர விஷயமானவை :—**

सर्वाशापरिपूरकचक्रस्वामिनीं, दुर्वासार्चितगुप्तयोगिनीं, कामाकर्षिण्यादिरञ्जनीं, कात्यायनीम् ।

१. कमलावाणीसेवितपार्श्वां

இந்த நாமா 'सचामररमावाणीसव्यदक्षिणसेविता' என்னும் ஸஹஸ்ரநாமப் பிரமாணத்தினுலும், 'लक्ष्मीवाणीनिषेविता' என்னும் ஸர்வபூர்த்திகரஸ்தவத்தின் பிரமாணத்திலும் ஏற்பட்டது. அம்பாளுக்கு இடது பக்கத்திலும் வலது பக்கத்திலும், முறையே, ஸ்ரீதேவியும், வாக்தேவியும் நின்றுகொண்டு அம்பாளை ஸேவிக்கின்றனர். இதனுல் அம்பிகையின் பக்தர்களுக்கு லக்ஷ்மீ கடாக்ஷமும் ஸரஸ்வதியின் பரிபூர்ண அநுக்கிரஹமும் ஏற்படுவது ஸூசிப்பிக்கப்படுகின்றது.

२. सर्वाशापरिपूरकचक्रस्वामिनीं



அம்பாள், ஸர்வ அபீஷ்டங்களையும் பரிபூர்த்தி செய்து வைக்கும் மஹிமையுடைய இந்த ஆவரணத்

தின் சக்கிரத்திற்கு ஈச்வரி. த்ரிபுரேசீ என்னும் திருநாம முடையவள்.

### ३. परमशिवकामिनीं

பரதேவதை சிதாநந்த ஸ்வரூபிணியாதலால் 'ஸங்' மாத்ரஸ்வரூப துரீய சிவஸ்வரூபத்தையும் ப்ரேமிக்கச் செய்கின்றனள். 'सोऽकामयत' என்னும் பிரமாணத்தின் படி பரதேவதை "**காமகலா**" ஸ்வரூபிணி என்றும் அறியத்தக்கவள்.

### ४. दुर्वासार्चितगुप्तयोगिनीं

இரண்டாவது ஆவரணத்தில் விளங்கும் யோகினிக்கு குப்தயோகினி யென்று பெயர்.

துர்வாஸ மஹர்ஷி ஸ்ரீவித்யா உபாஸக துரந்தரர். இவருக்கு குரோதபட்டாரகரென்று பெயர். இவர் பரதேவதையை 'சக்தி மஹிம்ந' ஸ்தோத்திரத்தால் துதித்திருப்பதோடு, அம்பாளின் வாஸஸ்தானமாகிற ஸ்ரீ நகரத்தை, 'ஸ்ரீ லலிதா ஸ்தவரத்னம்' என்னும் கிரந்தத்தில் நன்கு விமர்சம் செய்திருக்கிறார். இது தமிழுரையோடு சென்னை, ஸ்ரீ குஹாநந்த மண்டலியில் வெளியாகியுள்ளது.

### ५. दुःखध्वंसिनीं

ஸர்வ அநர்த்தங்களையும், நாசம் செய்பவள். துக்கம் அநர்த்தங்களால் உண்டாகின்றது. அநர்த்தம் அஞ்ஞானத்தால் உண்டாகின்றது. உபாஸகர்களின் அஞ்ஞானத்தை ஞானத்தால் ஒழிப்பவள்.

### ६. हंसिनी

"ஹம்ஸ:" என்னும் ஆத்மமந்த்ர ஸ்வரூபமாய் விளங்குபவள். அஹம் ஸ: என்பது ஹம்ஸமந்த்ரத்தின் லக்ஷ்யார்த்தமாகும். 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்னும் மஹாவாக்கியமும் இதுவே. ஆத்மபிரஹ்மைக்கிய அநுபவநிலையில் ஸ்வயம்பிரகாசமாய் விளங்குபவள். இதனால்,

### ७. निर्वाणनिजसुखप्रदायिनी

ஸ்வகீய நித்யாநந்தத்தை யுணரும் நிலையாகிய மோக்ஷத்தையருள்பவள். 'शिवज्ञानप्रदायिन' என்னும் ஸஹஸ்ரநாம வசனம் இந்த அர்த்தத்தையே பிரதிபாதனம் செய்கிறது.

### ८. नित्यकल्याणी

நாசரஹிதமான ஸுகஸ்வரூபிணி; நாசமற்ற சுகமே ஆநந்த வடிவ மோக்ஷமாம்.

### ९. कात्यायनी

மஹாகாளீ, மஹாலக்ஷ்மீ, மஹாஸரஸ்வதி யென்னும் மூன்று சக்திகளின் ஸமஷ்டிஸ்வரூபத்திற்குச் சண்டிகை யென்று பெயர். இந்தச் சண்டிகாஸ்வரூபத்தின் வியஷ்டி வடிவமாகும் மஹாலக்ஷ்மீ ஸ்வரூபிணி யென்பது காத்யாயநி வடிவமாகும். மஹிஷாஸுர வதத்தின் பொருட்டு முப்பத்து மூன்று கோடி தேவதைகளின் தேஜஸ்ஸானது ஒருங்கே திரண்டு

மூர்த்திகரித்த வடிவமே **மஹாலக்ஷ்மீ** ஸ்வரூபமாகும். இதன் விளக்கம் தேவீ மாஹாத்மியத்தில் நன்கு விமர்சிக்கப்பட்டுள்ளது. "**கமலாம்பிகையே சண்டிகா பரமேச்வரி**" என்று பின்னர் விமர்சிக்கப்படும்.

## १०. शर्वाणीं

அஷ்டமூர்த்த ஸ்வரூபத்தில் பிருதிவீ பூதத்தில் அதிஷ்டித்து விளங்கும் சிவஸ்வரூபத்திற்கு சர்வ: என்று பெயர். शर्वस्य पत्नी शर्वाणी. திருவாரூர் பிருதிவீ க்ஷேத்திரமாதலின் அங்கே விளங்கும் சிவசக்தியே **சர்வாணீ** யாகும்.

## ११. निरञ्जनीं

அஞ்ஜனமென்பது மை, கருமை, அஞ்ஞானம். அஞ்ஞானமற்ற ஞானஸ்வரூபிணீ என்பது பொருள்.

## १२. गर्वितभण्डासुरभञ्जनीं

**பண்டாஸுரன் வரலாறு**:—பரமேச்வரனது நெற்றிக் கண்ணால் நீறுக்கப்பட்ட மன்மதனை நினைத்துக் கூக்குரலிட்டு அழும் ரதிதேவியைக் கண்டு நான்முகனும் திருமாலும் மனமிரங்கிச் சித்ரகர்ம கணேசனையேவி, சாம்பலான மன்மதனைப் பிழைப்பிக்கவேண்டி, அச்சாம்பலைக்குவித்து மனிதஉருவாகச் செய்து அபிமந்த்ரணம்செய்ய, அதிலிருந்து ஓரஸுரன் தோன்றினன். இவனே பண்டாஸுரன். ருத்திரனது சினத்தழற் சாம்பலிலிருந்து தோன்றினமையால் ஆஸுரத்தன்மை ஏற்பட்டு தேவர்களை வருத்தத்

தொடங்கினன். பண்டாஸுரனது பீடை தேவர்கட்கு நீங்குமாறு பரமசிவன் ஒரு மஹாயாகமியற்றினர். அவ்வியாக குண்டத்தினின்றும் **ஸ்ரீலலிதாதேவி** ஆவிர்ப்பவித்துத் தனது சக்தி சேனையால் அவனைச் ஸம்ஹரித்தாள். இதன் விஸ்தாரமான விமர்சம் ஸ்ரீ லலிதோபாக்யானத்தில் காணலாம். திருவாரூரில் தான் இந்த மஹாயாகம் இயற்றப்பட்டது. ஆதலின் அதற்கு **தேவயாகபுரம்** என்னும் திருநாமம் ஏற்பட்டுள்ளது.

## १२. कामाकर्षिण्यादिरञ्जनीं

இந்த இரண்டாவது ஆவரண சக்கிரம் பதினாறு இதழ்களையுடைய கமலமாகும். ஒவ்வொரு தளத்திலும் ஒவ்வொரு சக்தியாகப் பதினாறு சக்திகள் உளர். அவர்களின் பெயர்களாவன :—

1. காமாகர்ஷிணீ
2. புத்தியாகர்ஷிணீ
3. அஹங்காராகர்ஷிணீ
4. சப்தாகர்ஷிணீ
5. ஸ்பர்சாகர்ஷிணீ
6. ரூபாகர்ஷிணீ
7. ரஸாகர்ஷிணீ
8. கந்தாகர்ஷிணீ
9. சித்தாகர்ஷிணீ
10. தைர்யாகர்ஷிணீ
11. ஸ்மிருத்யாகர்ஷிணீ
12. நாமாகர்ஷிணீ
13. பீஜாகர்ஷிணீ
14. ஆத்மாகர்ஷிணீ
15. அம்ருதாகர்ஷிணீ
16. சரீராகர்ஷிணீ

இந்த சக்திகளோடு விளங்குபவள்.

१४. निर्विशेषचैतन्यरूपिणी

விசேஷம் என்பது குணம், அல்லது உபாதி. குண மற்றதும் உபாதியற்றதுமான அபேத ஞானத்திற்கு நிர்விசேஷசித்தென்று பெயர். இதையே ஸ்வரூபமாக வுடையவள் நிர்விசேஷ சைதன்யம். 'चैतन्यस्वरूपा शक्तिः' என்று கௌடபாதஸூத்ரமும், 'सर्वचैतन्यरूपां तां आद्यां विद्यां च धीमहि' என்று தேவீபாகவதமும் கூறுவது இங்கு உணர்தற்பாலது.

१५. उर्वीतत्त्वादिस्वरूपिणी

உர்வீ-பூமி. பூமிதத்வம் முதல் சிவதத்வம் வரை யுள்ள முப்பத்தாறு தத்வஸ்வரூபிணி. இந்த முப்பத்தாறு தத்வங்கள்தாம் பிரபஞ்சம். ஆதலின் பிரபஞ்ச வடிவமாய் விளங்குபவள். முப்பத்தாறு தத்வங்களும் ஆத்ம தத்வம், வித்யா தத்வம், சிவதத்வமென மூன்று பெரும் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளன.

**ரஹஸ்யார்த்தமென்னும் தத்வ விமர்சம்**;—இந்த இரண்டாவது ஆவரணம் ஸ்வப்நாவஸ்தையிலுள்ள மனோவ்ருத்திகளைக் குறிக்கின்றது. ஸ்வப்னத்தில் தோன்றும் திருச்யங்கள் யாவும் ஸூக்ஷ்மமாயும் மனத்தின் கற்பனையாயும் இருப்பது யாவருக்கும் அநுபவம். இந்த ஸ்வப்னநுபவம், குப்தமாய் மனத்திற்குள் தோன்றுவதனுல்தான் இந்த ஆவரண தேவதைகளுக்குக் குப்த யோகினிகள் என்னும் பெயர் ஏற்பட்டுள்ளது. ஆவரண தேவதையின் தத்துவமாவது:— மனமும், மனோவிகாரங்களாகும் ஞானேந்திரிய விஷ

யங்கள் ஐந்தும், கர்மேந்திரிய விஷயங்கள் ஐந்தும், பஞ்சபூதஞானங்களும், ஆகப் பதினைந்தும் காமாகர்ஷிணி முதலிய பதினாறு தேவதைகள். ஸ்வப்னத்தில் விஷயங்களும் இந்திரியங்கள் முதலிய யாவும் மனத்தின் விகாரங்களேயாகுமென்பது சாஸ்திர சித்தாந்தம். மனதே இந்த அவஸ்தையில் பிரதானமானது. இந்த அவஸ்தையின் அபிமானியாகும் ஜீவனுக்குத் தைஜஸன் என்று பெயர்.

## மூன்றாவது ஆவரண கீர்த்தனை.

**ராகம் : சங்கராபரணம்** **தாளம் : ரூபகம்**

பல்லவி

श्रीकमलाम्बिकया कटाक्षितोऽहं
सच्चिदानन्दपरिपूर्णब्रह्मास्मि

அநுபல்லவி

पाकशासनादिसकलदेवतासेवितया
पंकजासनादिपंचकृत्यकृद्भावितया
शोकहरणचतुरपदया मूकमुख्यवाक्प्रदया
कोकनदविजयपदया गुरुगुहतत्त्रैपदया (श्रीकमला)

சரணம்

अनङ्गकुसुमाद्यष्टशक्त्याकारया
अरुणवर्णसंक्षोभणचक्राकारया
अनन्तकोट्यण्डनायकशंकरनायिकया
अष्टवर्गात्मकगुप्ततरया वरया

अनङ्गाद्युपासितया अष्टदलाब्जस्थितया
धनुर्बाणधरकरया दयासुधासागरया (श्रीकमला)

(இதன் பொருள்) இந்திரன் முதலிய ஸகல தேவர்களாலும் ஸேவிக்கப்படுபவளும், பிரஹ்மா விஷ்ணு, முதலிய காரியப் பிரஹ்மங்களால் தியானிக்கப் படுபவளும், சோகத்தைப் போக்கும் ஸாமர்த்திய முடைய சரணங்களையுடையவளும், மூகாசார்யாள் முதலிய தேவீ பக்தர்களுக்கு வாக்விலாசத்தை யருளிச் செய்தவளும், செந்தாமரை மலரை ஜயித்த பாதங்களை யுடையவளும், ஸத்குருவாகும் ஸ்ரீ குஹ நாதரால் உபதேசிக்கப்பட்ட மஹா வாக்கியமாகிய "**தத்துவமஸி**" என்னும் மூன்று பதங்களின் லக்ஷ்யார்த்த வடிவமாய் விளங்குபவளும், அநங்ககுஸுமா முதலிய எட்டு சக்திகளின் ஸ்வரூபமுடையவளும், செந்நிறமாகிய "**ஸர்வஸம்க்ஷோபணம்**" என்னும் பெயரையுடைய மூன்ருவது சக்கிரரூபமாயுள்ள



வளும், அநந்த கோடிக்கணக்கான அண்டங்களுக்கு நாயகனுகும் சங்கரனுக்கு நாயகியாயுள்ளவளும்,

அஷ்டவர்க்க மாத்ருகாஸ்வரூபமான குப்ததரயோகினீ ரூபமுடையவளும், சிரேஷ்டமானவளும், மன்மதன் முதலியவர்களால் உபாஸிக்கப்பட்டவளும், அஷ்டதள கமலமாகும் மூன்றுவது ஆவரண சக்கரத்தில் விளங்குபவளும், தனுஸ், பாணங்கள் இவைகளைத் தரித்த கரகமலங்களையுடையவளும், கருணைக்கடலாய் விளங்குபவளும் ஆகிய ஸ்ரீகமலாம்பிகையால் அநுக்கிரஹிக்கப்பட்ட நான் ஸச்சிதாநந்த பரிபூர்ணபிரஹ்மமாய் இருக்கிறேன்.

**விசேஷ விமர்சம்** :—இந்த ஆவரணம் மூன்றுவது வேற்றுமையில் அமைந்துள்ளது.

### १. पाकशासनादिसकलदेवतासेवितया

இந்திரன் முதலிய தேவதைகளால் ஸேவிக்கப்பட்டவள். இந்திரன் முதலிய தேவதைகள் தமக்கு அஸுரர்களால் இடுக்கண் நேர்ந்த போதெல்லாம் பரதேவதையை ஆராதித்து அவளருளால் வருத்தத்தினின்றும் நீங்கியுள்ளார். இதைப்பற்றிப் பிரஹ்மாண்டபுராணம், மார்க்கண்டேயபுராணம், காளிகாபுராணம், தேவீபாகவதம் முதலியவை விளக்கமாய்க் கூறுகின்றன.

### २. पञ्चकृत्यकृद्भावितया

சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியங்களை இயற்றுபவர் நான்முகன் முதலிய பஞ்சப்பிரஹ்மங்கள். இவர்கள் ஸதாகாலமும் பராசக்தியைத் தியானம் செய்து கொண்டிருக்கின்றனர்.

३. शोकहरचतुरपदया

அம்பாளின் சரணங்கள் ஞானஸ்வரூபம்-ஞானம் தான் அஞ்ஞானமாகும் சோகத்தையொழிக்கவல்லது.

४. गुरुगुहत्रैपदया

"தத்துவமஸி" என்னும் மஹா வாக்கியத்திலுள்ள மூன்று பதங்களே त्रैपद. இது ஸத்குருவால் உபதேசிக்கப்படும் மஹாவாக்கியமாகும். இந்த வாக்கியம் ஆத்மப்பிரஹ்மைக்கியத்தைப் பாகத்தியாக லக்ஷணையால் போதிக்கின்றதென்பது சாஸ்திர ஸித்தாந்தமாம்.

५. अनङ्गकुसुमाद्यष्टशक्त्याकारया

அநங்ககுஸுமை, அநங்கமேகலை, அநங்கமதனை, அநங்கமதனாதுரா, அநங்கரேகா, அநங்காங்குசா, அநங்கவேகினீ, அநங்கமாலினீ, என்னும் அஷ்டசக்திகளின் வடிவமாய் விளங்குபவள். ஈண்டு அநங்கமென்னும் பதத்திற்கு, அங்கங்களோடுகூடிய சரீரமற்றவள் என்பது பொருள். ஸ்தூலம், ஸூக்ஷ்மம் என்னும் இரண்டு சரீரமுமற்றவள்.

६. अष्टवर्गात्मकगुप्ततरया

மெய்யெழுத்துக்கள் முப்பத்தைந்தும் எட்டு வர்க்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை क, च, ट, त, प, य, श, ळ, என்னும் வர்க்கங்களாகும். இந்த எட்டு

வர்க்கங்களோடு கூடிய அநங்ககுஸுமா முதலிய எட்டு சக்திகளுக்கும் ஸமஷ்டியாய்க் **குப்ததர** யோகினிகள் என்று பெயர்.

௭. अनङ्गाद्युपासितया

பரதேவதையாகும் கமலாம்பிகையை உபாஸித்தவர்கள் மன்மதன் முதலியவர்களாவர். இவ்விஷயம்,

'मनुश्चन्द्रः कुबेरश्च लोपामुद्रा च मन्मथः ।
अगस्तिरग्निः सूर्यश्च इन्द्रः स्कन्दः शिवस्तथा ॥
क्रोधभट्टारको देव्या द्वादशामी उपासकाः ।'

என்னும் பிரமாணத்தால் ஸித்திக்கின்றது. (இதன் பொருள்) மநு, சந்திரன், குபேரன், லோபாமுத்ரை, மன்மதன், அகஸ்தியர், அக்னி பகவான், ஸூர்யன், இந்திரன், ஸ்கந்தன், பரமசிவன், குரோத பட்டாரகரென்னும் துர்வாஸ மஹரிஷி இப்பன்னிரெண்டு பேர்களும் பரதேவதையை உபாஸித்தவர்களாவர்.

**ரஹஸ்யார்த்தமென்னும் தத்துவ விமர்சம்:—** இந்த மூன்ருவது ஆவரணம் ஸுஷுப்தி அவஸ்தையை உணர்த்துகின்றது. ஸுஷுப்தி யென்பது ஜீவர்களின் தினப்பிரளயம். இதில், பிரமேயங்களாகும் விஷயங்களும், பிரமாணமாகும் உணர்ச்சியுமற்று பிரமாதா தான்மாத்திரமாய் விளங்குவான். **"ஒன்றும் தெரியாமல் ஸுகமாய்த் தூங்கினேன்"** என்னும் நினைப்பு விழித்துக்கொண்ட பிறகு ஒவ்வொருவருக்கும் ஏற்படுவதால், ஸுஷுப்தி யவஸ்தையில் நான் என்னும்

அநங்கஜீவனுகும் **பிராக்ஞனுடைய** வுணர்வும், ஸுகாகார அநுபவமும், ஒன்றும் தெரியாமையாகும் அஞ்ஞான அநுபவமும் இருந்திருத்தல் வேண்டும். 'நான் ஒன்றும் தெரியாமல் ஸுகமாய்த் தூங்கினேன்' என்னும் ஞானுநுபவம் உண்டாவதற்கு ஒரு விருத்தி வேண்டும். இந்த விருத்தியில் விளங்கும் சித்சக்தியே மூன்ருவது ஆவரண தேவதைகளாக விளங்குகின்றனள். அக்ஞான அவஸ்தைகளான ஜாக்கிரம், ஸ்வப்னம், ஸுஷுப்தியாகும் மூன்று அவஸ்தைகளேயும் விளக்குவதால் **திரிபுரஸுந்தரி** யென்னும் பெயர் மூன்ருவது ஆவரண சக்ரேச்வரிக்கு ஏற்பட்டுள்ளதைக் கூர்ந்து அறியத்தக்கது. அநங்க குஸுமா முதலிய மூன்ருவது ஆவரண தேவதைகளின் தத்துவம் பாவனுேபநிஷத்தில் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டு உள்ளது. அது வருமாறு :-

वचनादानगमनविसर्गानन्दहानोपादानोपेक्षाख्यबुद्धयोऽनङ्ग-कुसुमाद्यष्टौ ।

(இதன் பொருள்) கர்மேந்திரியங்களின் விஷயங்களான பேசுதல், எடுத்தல், போதல், கழித்தல், ஸுகித்தல், என்னும் இவ்வைந்தோடு நீக்க நினேப்பது, கிரஹிக்க நினேப்பது, உதாஸீனமாய் இருப்பது என்னும் மூன்று புத்தி வ்ருத்திகளும் சேர்ந்து எட்டு. இவ்வெட்டும் அநங்ககுஸுமா முதலிய எட்டு சக்திகளாவர்.

'நான் ஒன்றுமறியாமல் ஸுகமாய்த் தூங்கினேன்' என்னும் ஸுஷுப்தி அநுபவத்தில் ஒன்று

மறியாமல் என்னும் பாகம் நீக்குதற்குத் தக்கதும், தூங்கினேன் என்பது உபேக்ஷைக்குரியதும், நான், ஸுகமாய் என்னும் பாகம் உபாதேய (கொள்ளல்)மாகும் விஷயமுமாமென்று அறிதல் அவசியம்.

## நான்காவது ஆவரண கீர்த்தனை.

ராகம் : காம்போதி — தாளம் : அடதாளம்

பல்லவி

कमलाम्बिकायै कनकांशुकायै
कर्पूरवीटिकायै नमस्ते नमस्ते

அநுபல்லவி

कमलाकान्तानुजायै कामेश्वर्यै अजायै
हिमगिरितनूजायै ह्रींकारपूज्यायै
कमलानगरविहारिण्यै खलसमूहसंहारिण्यै
कमनीयरत्नहारिण्यै कलिकल्मषपरिहारिण्यै (कमला)

சரணம்

सकलसौभाग्यदायकाम्भोजचरणायै
संक्षोभिण्यादिशक्तियुतचतुर्थावरणायै
प्रकटचतुर्दशभुवनभरणायै
प्रबलगुरुगुहसंप्रदायान्तःकरणायै
अकळङ्करूपवर्णायै अपर्णायै
सुपर्णायै सुकरधृतचापबाणायै
शोभनकरमनुकोणायै सकुंकुमादिलेपनायै

चराचरादिकल्पनायै चिकुरविजितनीलघनायै
चिदानन्दपूर्णघनायै (कमला)

(இதன் பொருள்) தங்கம்போல் பிரகாசிக்கும் சரிகைச்சேலையை யுடையவளும், பச்சைக்கர்ப்பூர மணங்கமழும் தாம்பூலபூரித முகமுடையவளும், லக்ஷ்மீபதியாகும் திருமாலுக்கு ஸோதரியும், பிரஹ்ம மாகும் காமேச்வரனது பட்டமஹிஷியும், பிறப்பற்ற வளும், ஹிமவானுக்குப்புத்திரியும், ஹ்ரீம் என்னும் மஹாமந்த்ரத்தினுல் உபாஸிக்கப்படுபவளும், கமலா நகரமென்னும் திருவாரூரில் விஹரிப்பவளும், துஷ்டர் களாகும் அஸுரக்கூட்டங்களை ஸம்ஹாரம் செய் பவளும், அழகுவாய்ந்து பிரகாசிக்கும் நவரத்னங்கள் இழைத்த ஹாரங்களையுடையவளும், கலியின்கொடு மையால் ஏற்படும் பாபங்களை ஒழிப்பவளும், ஸமஸ்த வித ஸௌபாக்கியங்களையும் அருளும் ஆற்றலுடைய திருவடித் தாமரைகளையுடையவளும், ஸர்வஸம்க்ஷோ பிணி, ஸர்வ வித்ராவிணீ முதலிய பதினன்கு சக்திக ளோடு கூடிய நான்காவது ஆவரண முடையவளும், ஸ்தூலமாய் விளங்கும் பதினன்கு லோகங்களைத்தனது திருமேனியில் தரிப்பவளும், பிரபலமான ஸ்ரீகுருகுஹ ஸம்ப்ரதாயத்தையே தனது தாத்பரியமாயுடைய வளும், மாசற்ற வடிவத்தையும் நிறத்தையும் உடைய வளும், அபர்ணையென்னும் திருநாமமுள்ளவளும், ஸுபர்ணை யென்று அழைக்கப்படுபவளும், கரும்பு வில், பஞ்சபுஷ்ப பாணங்கள் இவைகளைக்கையில்

தரித்துள்ளவளும், சுபங்களை யெல்லாம் அருளும் பதினன்கு கோணசக்கிரத்திற்கு நாயகியாய் உள்ள வளும், நல்ல வாஸனையோடு கூடிய குங்குமப்பூ பச்சைக்கற்பூரம், கஸ்தூரி முதலியவற்றின் குழம்பைச்சரீரத்தில் அணிந்துள்ளவளும், சராசரப் பிரபஞ்சத்தைக் கற்பனையாய்ச் சிருஷ்டி செய்தவளும் நீலநிற மேகத்தை ஜயிக்கக்கூடிய கருங் கூந்தலையுடையவளும், சிதாநந்த பரிபூர்ண ஸ்வரூபமாய் விளங்கு பவளுமான ஸ்ரீ கமலாம்பிகையின் பொருட்டு நமஸ்காரம்.

இந்தக் கீர்த்தனம் நான்காவது வேற்றுமையாலாகிய பதங்களையுடையது. நான்காவது ஆவரணத்திற்கு **ஸர்வஸௌபாக்கியதாயக** சக்ரமென்று பெயர்.




**விசேஷாம்சங்கள்** :—இந்த கீர்த்தனத்திலும், ஸகுண ஸாகாரம், ஸகுண நிராகாரம், நிர்க்குணம், ஸ்ரீசக்ரஸம்பந்தம் எனப் பலவாகப் பிரிக்கப்படும் நாமாக்கள் உள்ளன. இவைகள் நான்காவது வேற்றுமையில் அமைந்துள்ளன.

**ஸகுண ஸாகார நாமாக்கள் :—**

कनकांशुकायै, कर्पूरवीटिकायै, हिमगिरितनूजायै, कमला-नगरविहारिण्यै, कमनीयरत्नहारिण्यै, अपर्णायै, सुपर्णायै, सुकरधृत-चापबाणायै, सकुङ्कुमादिलेपनायै, चिकुरविजितनीलघनायै ।

**ஸகுண நிராகார நாமாக்கள் :—**

कामेश्वर्यै, खलसमूहसंहारिण्यै, कलिकल्मषपरिहारिण्यै, अक-लङ्करूपवर्णायै, चराचरादिकल्पनायै, प्रकटचतुर्दशभुवनभरणायै ।

**நிர்க்குண நாமாக்கள் :—**

अजायै, प्रबलगुरुगुहसंप्रदायान्तःकरणायै, चिदानन्दपूर्ण-घनायै ।

**ஸ்ரீசக்ரஸம்பந்தமான நாமாக்கள் :—**

ह्रींकारपूज्यायै, सकलसौभाग्यदायकाम्भोजचरणायै, संक्षोभि-ण्यादिशक्तियुतचतुर्थावरणायै, शोभनकरमनुकोणायै *என்பனவாம்.*

## १. कमलाकान्तानुजायै

*லக்ஷ்மீபதியாகும் மஹாவிஷ்ணுவின் ஸஹோதரி; அம்பாள் திருமாலின் உடன் பிறந்தவள் என்பதன் விமர்சமாவது:*—**தேவீ பாகவதம் 9ம் ஸ்கந்தத்தில் கோலோகத்தில் சக்தி விசிஷ்ட மஹாகாரணேச்வரனிடமிருந்து சிருஷ்டிக்கிரமம் கூறப்பட்டுள்ளது.** *அதன்படி சிவசக்திகளின் ஸாமரஸ்ய ஆநந்தாம்ருத மயமான காரண ஜலத்தில் மூன்று அண்டங்கள்*

மிதந்து கொண்டிருந்தன. இவ்வண்டங்கள் திரிகுணாத்மக மாயையால் கற்பிதமானவை. ஸத்வகுண அண்டத்திற்குள் விஷ்ணு கௌரீக்களும், ரஜோகுண அண்டத்திற்குள் பிரஹ்மா லக்ஷ்மீக்களும், தமோகுண அண்டத்திற்குள் ருத்திர ஸரஸ்வதீக்களும் தோன்றினர். பின்னர் சித்சக்தியாகும் பரதேவதை லக்ஷ்மியை விஷ்ணுவுக்கும், ஸரஸ்வதியை பிரஹ்மாவுக்கும், கௌரியை ருத்திரனுக்கும் விவாஹம் செய்வித்துப் பின், பிரஹ்ம, விஷ்ணு, ருத்திரர்களாகிய திரிமூர்த்திகளுக்கு முறையே சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார கிருத்தியங்களைச் செய்யுமாறு ஆக்ஞாபித்தனள். இவ்வரலாற்றின்படி கமலாம்பிகையின் அம்சமாகும் கௌரீதேவி ஸத்வகுண அண்டத்தி (முட்டையி) ல் மஹாவிஷ்ணுவோடு உதித்தவளாகையால் **மஹாவிஷ்ணுவின் ஸஹோதரி** என்று கூறப்பட்டது.

### २. हिमगिरितनूजायै

ஸதீதேவியாகும் தாக்ஷாயணி தக்ஷயக்ஞத்தில் தனது சரீரத்தைத் தியாகம் செய்த பிறகு தாரக, சூரபத்மாதி யஸுரர்களின் ஸம்ஹாரத்தின் பொருட்டுக் குஹக் கடவுளைத் தோற்றுவிக்க ஹிமவானுக்குப் புத்திரியாய்ப் **பார்வதி** யென்னும் திருநாமத்தோடு விளங்கினள்.

### ३. सकलसौभाग्यदायकाम्भोजचरणायै

பக்தர்களுக்குத் தேவதைகள் அபயத்தையும் வரங்களையும் தங்கள் கைகளால் அருள்வர். பர

தேவதையோவெனின் தனது சரணங்களால் அருள்வள். **ஸகல ஸௌபாக்கியமென்பது** இஹபர ஸுகங்களும் மோக்ஷமும் ஆகும். பரதேவதையின் சரணங்கள் இரண்டும் உண்மைப்பக்தர்களுக்குப் போக மோக்ஷங்களையருள்கின்றன..

त्वदन्यः पाणिभ्यामभयवरदो दैवतगणः
त्वमेका नैवासि प्रकटितवराभीत्यभिनया ।
भयात् त्रातुं दातुं फलमपि च वाञ्छासमधिकं
शरण्ये लोकानां तव हि चरणावेव निपुणौ ॥

என்று ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்யாள் **ஸௌந்தர்ய லஹரியில்** கூறுகின்றனர். உபாஸகர்களுக்கு அபீஷ்டமான வரங்களையும் அபயவடிவ மோக்ஷத்தையும், சரணங்களால் அருள்வது பரதேவதைக்கே உரியதோர் சிறந்த லக்ஷணமாகும்.

### ४. ह्रींकारपूज्यायै

**ஹ்ருல்லேகை** யென்னும் ஏகாக்ஷரவடிவ புவனேச்வரீ மூலமந்த்ரத்தினுல் பூஜிக்கப்படுபவள். இதனுல் **கமலாம்பிகையே புவனேச்வரியாயும் விளங்குவது ஸூசிப்பிக்கப்படுகின்றது.**

### ५. संक्षोभिण्यादिशक्तियुतचतुर्थावरणायै

இந்த நான்காவது ஆவரணத்தில் **ஸர்வஸம்க்ஷோபிணீ** முதலிய பதினுன்கு சக்திகள் வசிக்கின்றனர். இவர்களுக்குப்பொதுவாய் **ஸம்பிரதாய யோகி**

னிகள் என்று பெயர். ஸம்பிரதாயம் என்ருல் குரு பரம்பரையில் தொன்றுதொட்டு அநுஷ்டித்து வந்த ஆசாரத்திற்கும் பெயர்.

௬. प्रकटचतुर्दशभुवनभरणायै

பரதேவதையாகும் கமலாம்பிகை ஸம்க்ஷோபிணீ முதலிய பதினுன்கு சக்திகளின் வடிவமாய் விளங்கிப் பிரகடமாய் விளங்கும் பூராதி ஏழு ஊர்த்துவ லோகங்களையும், அதலம் முதலிய ஏழு அதோலோகங் களையும் பரித்துக் காக்கின்றனள்.

௭. प्रबलगुरुगुहसंप्रदायान्तःकरणायै

प्रबल-வன்மை பொருந்திய, அதாவது இதர ஸம்பிர தாயங்களால், "இது சாஸ்திர ஸம்மதமல்ல" வென்று நிராகரிக்கவும், பூர்வபக்ஷம் செய்யவும் முடியாத गुरुगुहसंप्रदायान्तःकरणा ஸத்குருவாகும் ஸ்ரீ குஹாநந்த நாதரால் ஆக்ஞாபிக்கப்பட்ட ஆசாரத்தின் பரமதாத் பர்யமாய் விளங்குபவள் பரதேவதை.

௮. चिदानन्दपूर्णघनायै

அந்ருத ஜட துக்கங்கள் சற்றும் கலவாத ஞாந நந்த பரிபூர்ண ஸ்வரூபிணி.

**ரஹஸ்யார்த்தமென்னும் தத்துவ விமர்சம்**:— இந்த ஆவரண சக்ரம் ஈச்வர விசாரத்தில் ஈடுபட்ட மனத்தின் நிலையைக் குறிப்பிடுகின்றது. இத்தகைய மனத்தின் வ்ருத்திகளே, இந்த ஆவரண தேவதைகள். குரு ஸம்பிரதாயத்திற்கு மூலம் பரமேச்வரன் தான். ஆதிகுரு ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி யல்லவா?

## ஐந்தாவது ஆவரண கீர்த்தனை

ராகம்: பைரவி                                                  தாளம்: ஜம்பை

பல்லவி

श्रीकमलाम्बिकायाः परं न हि रे रे चित्त
क्षित्यादिशिवान्ततत्वस्वरूपिण्याः (श्रीकमला)

அநுபல்லவி

श्रीकण्ठविष्णुविरिञ्चादिजनयित्र्याः
शिवात्मकविश्वकर्त्र्याः कारयित्र्याः
श्रीकरबहिर्दशारचक्रस्थित्या-
स्सेवितभैरवीभार्गवीभारत्याः (श्रीकमला)

சரணம்

नादमयसूक्ष्मरूपसर्वसिद्धिप्रदादिदश-
शक्त्याराधितमूर्तेः श्रोत्रादिदशकरणात्मक-
कुळकौळिकादिबहुविधोपासितकीर्तेः
अभेदनित्यशुद्धबुद्धमुक्तसच्चिदानन्द-
परमाद्वैतस्फूर्तेः आदिमध्यान्तरहिताप्रमेय-
गुरुगुहमोदितसर्वार्थसाधकपूर्तेः
मूलादिनवाधारव्यावृत्तदशध्वनिभेदज्ञ-
योगिबृन्दसंरक्षण्याः अनादिमायाविद्या-
कार्यकारणविनोदहरणपटुतरकटाक्षवीक्षण्याः (श्रीकमला)

(இதன் பொருள்) ஓ மனமே! ருத்ரன், விஷ்ணு பிரஹ்மா முதலியவர்களுக்கு மாதாவாயும், அதிஷ்டான சிவ வடிவமான கல்பித பிரபஞ்சத்தை சிருஷ்டித்தவளாயும், சிருஷ்டி செய்விப்பவளாயும், சிரேயஸ்ஸையருளும் **பஹிர்த்தசார சக்கிரத்தில்** அமர்ந்துள்ளவளும், பைரவி, லக்ஷ்மி, ஸரஸ்வதி இவர்களால் ஸேவிக்கப்படுபவளும், நாதமயமான ஸூக்ஷ்ம வடிவத்தையுடைய ஸர்வஸித்திப்பிரதை முதலிய பத்து சக்திகளால் ஆராதிக்கப்படுபவளாயும், சுரோத்திரம் முதலிய ஞானேந்திரியங்கள் ஐந்து, வாக்கு முதலிய கர்மேந்திரியங்கள் ஐந்து, ஆக பத்து கரணங்கள் வடிவமாய்க் குள கௌள முதலிய யோகினிகளால் பலவிதமாக உபாஸிக்கப்படும் கீர்த்தியையுடையவளும், பேதரஹிதமாயும், நாசமற்றதாயும், அஞ்ஞானக்கலப்பற்றதாயும், போத வடிவமாயும், பந்தமற்றதாயும், ஸச்சிதாநந்த ஸ்வரூபமாயும், பரமாத்வைத ஸ்பூர்த்தியாய் விளங்குபவளாயும், ஆதியும், இடையும், அந்தமுமின்றியதும், அப்பிரமேயமானதும் ஆன குரு குஹ ஸ்வரூபத்தில் எல்லாப்புருஷார்த்தங்களும் அடையப்படுங்காரணத்தால் பரிபூர்ண ஆநந்த ஸ்வரூபமாய் விளங்குபவளும் மூலாதாராதி ஒன்பது ஆதாரங்களிலும் ஒன்றைவிட ஒன்று பின்னமான பத்து நாதங்களின் பேதத்தை அறிந்த யோகிகளின் கூட்டங்களை ரக்ஷிக்கிறவளாயும், அநாதியாயுள்ள மாயை, அவித்யை இவைகளின் கார்யகாரணங்களை நாசம் செய்வதில் மிகவும் ஸாமர்த்தியமுடைய கடைக்கண் பார்வையை

உடையவளாயும், பூமி முதல் சிவதத்துவம் ஈருகவுள்ள முப்பத்தாறு தத்வஸ்வரூபிணியாயுமுள்ள **ஸ்ரீகமலாம்பிகையைக்** காட்டிலும் வேருனது மற்றென்று இல்லை என்று நீ நன்கு உணர்வாயாக.

இந்த கீர்த்தனம் ஐந்தாவது வேற்றுமையோடு கூடியது. இது ஐந்தாவது ஆவரண தேவதைகளோடு கூடிய சித்சக்தியைப் பற்றியது.

இதிலும் ஸகுணஸாகாரம், ஸகுண நிராகாரம், நிர்க்குணம், ஸ்ரீ சக்ரஸம்பந்தம் இவைகளோடு கூடிய நாமாக்கள் உள்ளன.

**ஸகுணஸாகாரம் ;—**

श्रीकण्ठविष्णुविरिञ्चादिजनयित्री, सेवितभैरवीभार्गवीभारती ।

**ஸகுண நிராகாரம் :—**

क्षित्यादिशिवान्ततत्त्वस्वरूपिणी, शिवात्मकविश्वकर्त्री, कारयित्री, मूलादिनवाधारव्यावृत्तदशध्वनिभेदज्ञयोगिबृन्दसंरक्षणी, अनादिमाया-विद्याकार्यकारणविनोदहरणपटुतरकटाक्षवीक्षणी ।

**நிர்க்குணம் :—**

अभेदनित्यशुद्धबुद्धमुक्तसच्चिदानन्दपरमाद्वैतस्फूर्तिः, आदि-मध्यान्तरहिताप्रमेयगुरुगुहमोदितसर्वार्थसाधकपूर्तिः ।

**ஸ்ரீ சக்ர ஸம்பந்தமானவை :—**

श्रीकरबहिर्दशारचक्रस्थितिः, नादमयसूक्ष्मरूपसर्वसिद्धिप्रदादि-

दशशक्त्याराधितमूर्तिः, श्रोत्रादिदशकरणात्मककुलकौलिकादिबहुविधोपासितकीर्तिः ।

**விசேஷ விமர்சம்**:—பிருதிவிமுதல் சிவம் ஈருகவுள்ள முப்பத்தாறு தத்வங்களாய் விளங்குபவள். பிரபஞ்ச சிருஷ்டி, ஸ்திதி லயங்களின் பொருட்டு பிரஹ்ம விஷ்ணு ருத்திரர்களைத் தோற்றுவித்தவள்.

१. श्रीकरबहिर्दशारचक्रस्थित्याः




பஹிர்த்தசார சக்கிரத்திற்கு **ஸர்வார்த்த ஸாதக சக்ரமென்று** பெயர். ஸகல புருஷார்த்தங்களையும் அருளும் ஆற்றல் அந்த சக்கிரத்திலுள்ள ஆவரணசக்திகளுக்கு உள்ள காரணத்தால் அதற்கு ஸர்வார்த்த ஸாதக சக்ரமென்றுபெயர். அதற்குத் தலைவியாய் உள்ளவள் **கமலாம்பிகை.**

२. सेवितभैरवीभार्गवीभारत्याः

**ருத்ராணீ, லக்ஷ்மீ, ஸாஸ்வதீ** இவர்களால் ஸேவிக்கப்படுபவள். இவர்கள் மூவரும் த்ரிமூர்த்திகளின் சக்திகள். பிரஹ்ம விஷ்ணு ருத்ரர்களாகிய த்ரிமூர்த்திகளுக்குச் சிருஷ்டியாதி கார்யங்களைச்

செய்ய அருள்புரிந்தவள் பரதேவதை. ஆதலின் த்ரி மூர்த்திகள் தங்கள் தங்கள் பத்தினிகளோடு அம்பாளைச் சேவிக்கின்றனர்.

'अतस्त्वामाराध्यां हरिहरविरिञ्चादिभिरपि'

என்று ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்யாளும் **ஸௌந்தர்ய லஹரியில்** கூறியிருக்கிறார்கள்.

३. नादमयसूक्ष्मरूपसर्वसिद्धिप्रदादिदशशक्त्याराधितमूर्तेः

நாதமயமான ஸூக்ஷ்ம ரூபத்தையுடைய **ஸர்வஸித்திப்ரதை** முதலிய பத்து சக்திகளால் ஆராதிக்கப் படும் ஸ்வரூபத்தையுடையவள். இந்த ஆவரணத்தில் ஸர்வஸித்திப்ரதை, ஸர்வஸம்பத்ப்ரதை, ஸர்வப்பிரியங்கரீ, ஸர்வமங்களகாரிணீ, ஸர்வகாமப்ரதை, ஸர்வ துக்க விமோசனீ, ஸர்வமிருத்யுப் பிரசமனீ, ஸர்வ விக்கின நிவாரணீ, ஸர்வாங்க ஸுந்தரீ, ஸர்வ ஸௌபாக்யதாயினீ, என்னும் பத்து சக்திகள் வஸித்துக்கொண்டு பரதேவதையை ஆராதித்துக்கொண்டு விளங்குகின்றனர். இவர்கள் மிகவும் ஸூக்ஷ்மமான நாதஸ்வரூபத்தை யுடையவர்கள். நாதங்கள் பத்து வகைப்படும். இந்த தசவித நாதங்கள் யோகிகளுக்குப் புலப்படுவனவாகும். தசவிதநாதங்களாவன :- 1. சிணி, 2. சிணிசிணி, 3. கண்டாநாதம், 4. சங்க நாதம், 5. வீணா நாதம், 6. தாள சப்தம், 7. வேணு நாதம், 8. பேரீ சப்தம், 9. மிருதங்க நாதம், 10. மேக நாதம். இவைகள் ஏகாக்கிர சித்தத்தினால் சுழும்நா நாடியில் கேட்கப்படுவனவாகும்.

இந்த நாதங்கள் யாவும் மூலாதாரம் முதல் ஆக்ஞை வரையிலுள்ள ஒன்பது சக்கிரங்களில் கேட்கப்படுவனவாதலின் मूलाधारादिनवाधारव्यावृत्तदशध्वनिभेदज्ञयोगि-वृन्दसंरक्षण्याः என்று மேலே கூறப்பட்டுள்ளது. ஒன்பது சக்ரங்கள் ஸுஷும்னையோடு ஸம்பந்தப்பட்டுள்ளனவென்பது யோகசாஸ்திரப் பிரஸித்தமாகும். இந்த பத்துவிதமான நாதங்களின் பரஸ்பரபேதத்தை நுட்பமாய் அறியவேண்டும். இத்தகைய அறிவையுடையவர்களே யோகிகளாவர். இவர்களைக் காப்பவள் பரதேவதை.

४. श्रोत्रादिदशकरणात्मककुलकौलिकादिबहुविधोपासितकीर्तिः

ப்ரகடயோகினி முதல் பராபராதி ரஹஸ்ய யோகினிவரையில் ஒன்பது யோகினிகள். இவர்கள் பரதேவதையைப் பலவிதமாய் உபாஸிக்கின்றனர். இத்தகைய கீர்த்தியையுடையவள். குளகௌளயோகினிக்கு **குளோத்தீர்ண யோகினி** என்றும் ஒரு பெயருண்டு. இந்த யோகினியின் தத்துவம் ஞாநேந்திரிய கர்மேந்திரிய வடிவமாகுமென்று ஈண்டு கூறப்பட்டுள்ளது. ஸ்ரீ பாவனோபனிஷத்தில் பிராணாதி மஹாவாயுக்களாகவும் நாகாதி உபவாயுக்களாகவும் கூறப்பட்டுள்ளது அறியத்தக்கது.

५. अभेद பேதமற்ற नित्य நாசமற்ற शुद्ध அஞ்ஞானக்கலப்பற்ற बुद्ध ஞானஸ்வரூப मुक्त பந்தமற்ற सच्चिदानन्दपरमाद्वैतस्फूर्तेः ஸச்சிதாநந்த அத்வைத ஸ்புரண ஸ்வரூபிணி.

௬ आदिमध्यान्तरहित பிறப்பு, இறப்பு, இடை இவை களற்ற अप्रमेय வாக்கிற்கும் மனதுக்கும் எட்டாத गुरुगुहमोदित குருநாதராகிய குஹப்பெருமானுக்கு மிக்க ஸந்தோஷத்தைத் தருவதாயும் உள்ள सर्वार्थसाधकपूर्तेः ஸகல புருஷார்த்தங்களையும் அருள வல்ல பரிபூர்ண ஸ்வரூபிணியாயும்

௭. अनादिमायाविद्याकार्यकारणविनोदहरणपटुतरकटाक्ष-वीक्षण्याः

அநாதியாயுள்ள மாயை, அவித்யை இவைகளின் கார்ய, காரணலீலையை ஒழிப்பதில் ஸாமர்த்தியமுள்ள கடைக்கண் பார்வையுடையவள்.

௮. क्षित्यादिशिवान्ततत्वस्वरूपिण्याः

பூமிமுதல் சிவதத்வம் வரையுள்ள முப்பத்தாறு தத்வ ஸ்வரூபிணியாகும் பரதேவதையைவிட परं नहि மேலான ஒன்றும் இல்லை.

## ஆருவது ஆவரண கீர்த்தனை.

ராகம்: புன்னாகவராளி — தாளம்: ரூபகம்

பல்லவி

कमलाम्बिकायास्तव भक्तोऽहं
शंकर्याः श्रीकर्याः संगीतरसिकायाः

அநுபல்லவி

सुमशरेक्षुकोदण्डपाशाङ्कुशपाण्याः
अतिमधुरतरवाण्याः शर्वाण्याः कल्याण्याः
रमणीयपुन्नागवरालिविजितवेण्याः (श्रीकमला)

சரணம்

दशकलात्मकवह्निस्वरूपप्रकाशान्त-
र्दशारसर्वरक्षाकरचक्रेश्वर्याः
त्रिदशादिनुत क-च-वर्गद्वयसर्वज्ञादि-
दशशक्तिसमेतमालिनीचक्रेश्वर्याः
त्रिदशविंशतिवर्णगर्भिणीकुण्डलिन्याः
दशमुद्रासमाराधितकौलिन्याः
दशरथादिनुतगुरुगुहजनकशिवबोधिन्याः
दशकरणवृत्तिमरीचिनिगर्भयोगिन्याः (श्रीकमला)

(இதன் பொருள்) ஸுகத்தைத் தருபவளும், மோக்ஷத்தை அளிப்பவளும், ஸங்கீதத்தில் ரஸனை உடையவளும், புஷ்பபாணம், கரும்புவில், பாசம், அங்குசம் இவைகளைக் கைகளில் தரித்துள்ளவளும், மிகவும் மதுரமான வாக்கையுடையவளும், பரமசிவனுடைய மனைவியும், கல்யாணியும், புந்நாக விருக்ஷத்தில் மொய்த்துள்ள சிறந்த வண்டுகளை ஜெயிக்கும் கூந்தலையுடையவளும், பத்துக்கலைகளையுடைய அக்கினியின் ஸ்வரூபமாய்ப் பிரகாசித்துக்கொண்டுள்ள ஸர்வரக்ஷாகரம் என்னும் **அந்தர்த்தசார சக்ரத்தின்** நாயகியாயுள்ளவளும், **கவர்க்கம், சவர்க்கம்** ஆகிய பத்து வர்ணங்களோடு கூடித் தேவதைகளால் ஆராதிக்கப்பட்ட **த்ரிபுரமாலினீ** யென்னும் சக்ரேச்வரீ ஸ்வரூபமாயுள்ளவளும், ஐம்பது மாத்ருகைகளைக் கர்ப்பத்தில் அடக்கியுள்ள குண்டலினீ சக்தி ஸ்வரூப

மாயுள்ளவளும், பத்து முத்திரைகளால் ஆராதிக்கப் பட்ட கௌளினியாயும், தசரதன் முதலியவர்களால் துதிக்கப்பட்ட, குருகுஹனுக்குப் பிதாவான சிவ ஸ்வரூப ஞானப் பிரதாயினியாயும், ஞானேந்திரிய கர் மேந்திரியங்களின் விருத்திகளின் கிரண ரூப நிகர்ப்ப யோகினியாயுமுள்ள கமலாம்பிகையாகும் உனது பக்தன் நான்.

இது ஆறுவது ஆவரண கீர்த்தனம்.

**ஸர்வரக்ஷாகர சக்கிரம் பத்து கோணங்கள்.**




**நிகர்ப்ப யோகினி. சக்ரேச்வரி த்ரிபுரமாலினீ.** ஆறுவது வேற்றுமையோடு விளங்குவது. இதில் பரதேவதை யின் ஸகுண ஸாகாரம், ஸகுண நிராகாரம், ஸ்ரீ சக்ர ஸம்பந்த நாமாக்கள் கூறப்பட்டுள்ளன.

**ஸகுணஸாகார நாமாக்கள் :—**

संगीतरसिका, सुमशरेक्षुकोदण्डपाशाङ्कुशपाणिः, अतिमधुर-तरवाणी, शर्वाणी, कल्याणी, रमणीयपुन्नागवरालिविजितवेणी ।

**ஸ்ரீசக்ரஸம்பந்தமான நாமாக்கள் :—**

अन्तर्दशारसर्वरक्षाकरचक्रेश्वरी, क-च-वर्गद्वयसर्वज्ञादिदश-शक्तिसमेतमालिनीचक्रेश्वरी, त्रिदशविंशतिवर्णगर्भिणीकुण्डलिनी, दश-मुद्रासमाराधितकौळिनी, दशकरणवृत्तिमरीचिनिगर्भयोगिनी ।

**ஸகுண நிராகாரம்.**

गुरुगुहजनकशिवबोधिनी

**விசேஷ விமர்சம் :—**

शंकरी

*இஹபர ஸௌக்கியங்களை யருள்பவள்.*

श्रीकरी

*சிரேயஸ்ஸாகும் மோக்ஷத்தையளிப்பவள்.*

सुमशरेक्षुकोदण्डपाशांकुशपाणिः ।

*அம்பாளின் நான்கு திருக்கரங்களில் விளங்கும் ஆயுதங்களின் ரஹஸ்யார்த்தம்:—*

1. मनोरूपेक्षुकोदण्डा पञ्चतन्मात्रसायका ।
   रागस्वरूपपाशाढ्या क्रोधाकारांकुशोज्ज्वला ।

*என்னும் பிரமாணத்தின்படி (செந்தாமரை, அசோகம் மாம்பூ, மல்லிகை, நீலோத்பலம் என்னும்) ஐந்து புஷ்பங்களே பாணங்கள். இவை பஞ்சதன்மாத்ரைகள் ஆகும்.*

2. கரும்புவில் = மனம்

3. ராகம் = (ஆசையே) பாசம்

4. குரோதம் = அங்குசம்

दशकलात्मकवह्निस्वरूपप्रकाशान्तर्दशारसर्वरक्षाकरचक्रेश्वरी सर्वज्ञादिदशशक्तिसमेतमालिनीचक्रेश्वरी

ஆறுவது ஆவரண சக்ரமான அந்தர்த்தசாரத்தின் பிரக்ருதி அக்கினியாகும். அக்கினிக்கு தூம்ரார்ச்சிஸ் முதலிய பத்து கலைகளுண்டு.

இந்த சக்ரத்தின் ஆவரண தேவதைகள் பதின்மர். ஸர்வக்ஞை, ஸர்வசக்தி, ஸர்வைச்வர்யப்ரதா, ஸர்வக்ஞானமயீ, ஸர்வ வியாதி விநாசினி, ஸர்வாதார ஸ்வரூபா, ஸர்வபாபஹரா, ஸர்வாநந்தமயீ, ஸர்வ ரக்ஷாஸ்வரூபிணீ, ஸர்வேப்ஸிதபலப்ரதா.

இந்த சக்ரத்தின் ஈச்வரி த்ரிபுரமாலினீயாகும். இந்த ஆவரண தேவதைகளுக்கு **நிகர்ப்ப யோகினி களென்று பெயர்.**

त्रिदशविंशद्वर्णगर्भिगी कुण्डलिनी

முப்பதும் இருபதும் ஆக ஐம்பது வர்ணங் (எழுத்துக்) களைத் தனக்குள் அடக்கி வைத்துள்ளவள் **குண்டலினீ சக்தியாகும்.** குண்டலினீ சக்தியானது, மூலாதாரம் முதல் ஆக்ஞைவரையுள்ள ஆறு ஆதார சக்ரங்களையும் தனது ராஜ வீதியாகும் ஸுஷும்னையுள் உடைத்தானவள். இவற்றில் மூலா

தாரத்தில் 4 எழுத்துக்களையும், ஸ்வாதிஷ்டானத்தில் 6 எழுத்துக்களையும், மணிபூரகத்தில் 10 எழுத்துக்களையும் அநாஹதத்தில் 12 எழுத்துக்களையும், விசுத்தியில் 16 எழுத்துக்களையும், ஆக்ஞையில் 2 எழுத்துக்களையும் ஆக ஐம்பது எழுத்துக்களையும் அடக்கிவைத்துள்ளவள்.

दशमुद्रासमाराधितकौलिनी

பத்து முத்ரைகள்:— (1) ஸர்வஸம்க்ஷோபிணி (2) ஸர்வவித்ராவிணீ (3) ஸர்வாகர்ஷிணீ (4) ஸர்வ வசங்கரீ (5) ஸர்வோன்மாதினீ (6) ஸர்வமஹாங்குசா (7) ஸர்வகேசரீ (8) ஸர்வபீஜா (9) ஸர்வயோநி (10) ஸர்வத்ரிகண்டா.

இந்த தசமுத்ரைகளைப் பரதேவதைக்குக் காட்டினுல் பரம திருப்தியடைபவள் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றது.

कौलिनी

குலஸம்பந்தமாய் விளங்கும் பராசக்தி யென்பது ரஹஸ்யார்த்தமாம்.

शिवबोधिनी

சிவக்ஞான ப்ரதாயினீ, சிவஸ்வரூபத்தைப் போதிப்பவள்.

## ஏழாவது ஆவரண கீர்த்தனை.

ராகம்: ஸஹானா      தாளம்: த்ரிபுட

பல்லவி

श्रीकमलाम्बिकायां भक्तिं करोमि
श्रितकल्पवाटिकायां
चण्डिकायां जगदम्बिकायां

அநுபல்லவி

राकाचन्द्रवदनायां राजीवनयनायां
पाकारिनुतचरणायां आकाशादिकिरणायां
ह्रींकारविपिनहरिण्यां ह्रींकारसशरीरिण्यां
ह्रींकारतरुमञ्जर्यां ह्रींकारेश्वर्यां गौर्यां     (श्रीकमला)

சரணம்

शरीरत्रयविलक्षणसुखतरस्वात्मानुभोगिन्यां
विरिञ्चिहरीशानहरिहयवेदितरहस्ययोगिन्यां
परादिवाग्देवतारूपवशिन्यादिविभागिन्यां
चरात्मकसर्वरोगहरनिरामयराजयोगिन्यां
करधृतवीणावादिन्यां कमलानगरविनोदिन्यां
सुरनरमुनिजनमोदिन्यां गुरुगुहवरप्रसादिन्यां     (श्रीकमला)

(இதன் பொருள்) தன்னைச் சரணடைந்தவர்களின் அபீஷ்டங்களையருளுவதில் கற்பகச்சோலையைப் போன்றவளும், சண்டிகை யென்னும் திருநாமம் பெற்றவளும், உலகமாதாவும், பூர்ண சந்திரபிம்பத்

தைப்போன்ற திருமுகமுடையவளும், செந்தாமரை யிதழ்போன்ற கண்களையுடையவளும், இந்திரனால் துதிக்கப்பட்ட சரணங்களையுடையவளும், ஆகாசம் முதலிய ஜடப்பொருள்களைப்பிரகாசிப்பிக்கும் கிரணங் களையுடையவளும், ஹ்ரீம் என்னும் மந்த்ரக் காட்டில் உலாவும் பெண்மானைப்போன்றவளும், ஹ்ரீங்காரமா கிய விருக்ஷத்தின் பூங்கொத்தாய் விளங்குபவளும், ஹ்ரீம் என்னும் மந்த்ரத்தையே சரீரமாயுடையவளும், ஹ்ரீங்காரம் என்னும் மந்த்ரத்திற்கு நாயகியாயுள்ள வளும், கௌரீ என்னும் திருநாமமுடையவளும், ஸ்தூல ஸூக்ஷ்மகாரண சரீரங்களுக்கு விலக்ஷணமான பரமாநந்த வடிவ ஸ்வாத்ம அநுபோக ஸ்வரூபிணியா னவளும், பிரஹ்மா, விஷ்ணு, ருத்திரன், இந்திரன், ஹயக்ரீவர் முதலியவர்களால் ரஹஸ்யமாய் அறியப் ட்டவளும், பரை, பச்யந்தீ முதலிய வாக்தேவதை களின் வேற்றுருவமாகும் வசினி முதலிய எட்டு ஸ்வரூபமுடையவளும், சராசராத்மகமான பிரபஞ்ச ரோகத்தை யொழிக்கும் **ஸர்வரோகஹரமென்னும்**




**சக்கிரத்தில்** விளங்கும் நிராமய ராஜயோகினியாயும்,

கையிலேந்திய வீணையை மீட்டுபவளாயும், கமலா நகரத்தில் விளையாடுபவளாயும், தேவ, மநுஷ்ய, முனி கணங்களைக் களிப்பிக்கச்செய்பவளும், ஸ்ரீ குருகுஹருக்கு வரமளித்தவளாயும் உள்ள கமலாம்பிகையினிடம் பக்தி செய்கிறேன்.

இது ஏழாவது ஆவரணத்தைக்குறிப்பது. ஏழாம் வேற்றுமைப்பதங்களால் ஆக்கப்பட்டது. இது **ஸர்வ ரோகஹர சக்ர** ஸம்பந்தமானது. இதில் பரதேவதையின் ஸகுண ஸாகாரம், ஸகுண நிராகாரம், மந்த்ர சாஸ்திரஸம்பந்தம், ஸ்ரீ சக்ரஸம்பந்தம் முதலியவற்றைக்குறிக்கும் நாமாக்கள் உள்ளன.

**ஸகுண ஸாகாரம் ;—**

राकाचन्द्रवदना, राजीवनयना, पाकारिनुतचरणा, करधृत-वीणावादिनी, कमलानगरविनोदिनी, सुरनरमुनिजनमोदिनी, चण्डिका, गौरी, जगदम्बिका ।

**ஸகுண நிராகாரம் :—**

आकाशादिकिरणा, विरिञ्चिहरीशानहरिहृदयवेदितरहस्ययोगिनी ।

**நிர்க்குணம் :—**

शरीरत्रयविलक्षणसुखतरस्वात्मानुभोगिनी ।

**ஸ்ரீசக்ரஸம்பந்தமானவை :—**

परादिवाग्देवतारूपवशिन्यादिविभागिनी, चराचरात्मकसर्वरोग-हरनिरामयराजयोगिनी,

**மந்திரசாஸ்திர ஸம்பந்தமானவை:—**

ह्रींकारविपिनहरिणी, ह्रींकारसुशरीरिणी, ह्रींकारतरुमञ्जरी, ह्रींकारेश्वरी ।

**விசேஷ விமர்சம்:—** ஸ்ரீ கமலாம்பிகையைச் சத்துருக்களாகும் ஆஸுர அநர்த்த வ்ருத்திகளை நாசம் செய்யும் **சண்டிகையாகவும்**, கைகளில் வீணையைத் தரித்துக்கொண்டு வாசிக்கும் **ராஜச்யாமளையாகவும்**, ஜகன்மாதாவாகும் காரண **காமகலையாகவும்**, **வாகீச்வரியாகும்** கௌரியாகவும் அபேதப்படுத்திக் கூறியிருப்பது நுட்பமாயுணரத்தக்கது; அன்றியும் ஹ்ரீங்காரமந்த்ர அதிஷ்டாத்ரியாகும் **புவனேச்வரியாகவும்** கமலை விளங்குகின்றனள். ஆநந்தஸ்வரூப ஆத்மபிரஹ்மைக்கிய ஸமாதி நிலையில் அபரோக்ஷாநுபூதி ஸ்வரூபிணியாயும் பிரதிபாதிக்கப்பட்டுள்ளது மிகவும் ரஹஸ்யமான விஷயமாகும். அஞ்ஞான காரியங்களாகும் ஸகல அநர்த்தங்களே ஸர்வரோகங்களாம். அவற்றை அடியோடு நாசம் செய்யும் ஞான அல்லது வித்யாஸ்வரூபிணியே சித்சக்தியாகும் கமலாம்பாள். இவளே **ராஜயோகினி.** मुनिजना := ஸதா ஆத்மப்பிரஹ்மைக்கிய மனன சீலர்கள்.

### எட்டாவது ஆவரண கீர்த்தனை.

**ராகம்: கண்டா** **தாளம்: ஆதி**

பல்லவி

श्रीकमलाम्बिकेऽवाव शिवे करधृतशुकशारिके (श्रीकमला)

அநுபல்லவி

लोकपालिनि कपालिनि शूलिनि
लोकजननि भगमालिनि
सकृदालोकय मां सर्वसिद्धिप्रदायिके
त्रिपुराम्बिके बालाम्बिके (श्रीकमला)

சரணம்

संतप्तहेमसन्निभदेहे सदाऽखण्डैकरसप्रभावे
सन्तापहरत्रिकोणगेहे सकामेश्वरीशक्तिसमूहे
संततं मुक्तिघण्टामणिघोषायमानकवाटद्वारे
अनन्तगुरुगुहविदिते कराङ्गुलिनखोदय-
विष्णुदशावतारे अन्तःकरणेक्षुकार्मुक-
शब्दादिपञ्चतन्मात्रविशिखात्यन्तरागपाश-
द्वेषाङ्कुशधरकरे अतिरहस्ययोगिनि परे (श्रीकमला)

(இதன் பொருள்) ஹே கமலாம்பிகையே; மேலான ஸ்வரூபமுடையவளே!! மங்கள ஸ்வரூபிணியே, கையில் கிளியைத் தரித்துள்ள சாரிகையே, (சாரிகை ஒருவித ச்யாமளா) உலக மாதாவும், உலக ரக்ஷணியும், கபாலத்தையும் த்ரிசூலத்தையும் தரித்துள்ள உலக ஸம்ஹார்த்ரியாயும் விளங்குபவளே, பக மாலினியே, ஸர்வஸித்திப்பிரத சக்ரத்தின் நாயிகையான **த்ரிபுராம்பிகையே**, உருக்கிய தங்க நிறம்போன்ற சரீர காந்தியுடையவளே, ஸதா பிரவஹிக்கும்

அகண்ட ஏகரஸ ஸ்வரூபிணியே, தாபத்ரயங்களை நாசம் செய்யும் **த்ரிகோணத்தையே** ஆலயமாயுடைய வளே, காமேச்வரீ முதலிய மூன்று சக்திகளோடு கூடி விளங்குபவளே, இடையறுது எப்பொழுதும் கோஷித் துக்கொண்டுள்ள மோக்ஷ மணிகளையுடைய கத வோடு கூடிய துவாரத்தையுடையவளே, கால தேச வஸ்து பரிச்சேதமற்ற குருகுஹரால் அறியப்படுப வளே, கை விரல்களின் நகங்களினின்றும் தோன்றிய விஷ்ணுவின் தசஅவதார ஸ்வரூபிணியே, அந்தஃகரண மாகும் கரும்பு வில், சப்த ஸ்பர்சாதி தன்மாத்ர வடிவ பாணங்கள், பேராசையாதும் பாசம், த்வேஷமாகும் அங்குசம் இவைகளைத் தரித்துள்ள கரங்களையுடைய வளே, **அதி ரஹஸ்ய யோகினி** யென்னும் திருநாம முடையவளே, அடியேனை ஒரு தடவை கடைக்கண் ணுல் பார்த்து என்னை ரக்ஷிப்பாயாக.

இது எட்டாவது ஆவரணத்தைக் குறிப்பது. விளிவேற்றுமையாகும் எட்டாவது வேற்றுமைப் பதங்களால் ஆகியது. இந்தச் சக்ரத்திற்கு **ஸர்வஸித் திப்ரத சக்ரமென்று** பெயர். இந்தச் சக்ரேச்வரிக்குத் **திரிபுராம்பா** என்று பெயர்.

**விசேஷ விமர்சம்:—** கையில் கிளியையுடைய சாரிகா ஸ்வரூபமானது **அஷ்டவித சியாமளா** பேதங் களில் ஒன்ருகும்.

கபாலம், சூலம் முதலிய ஆயுதங்களைத் தரித் துள்ள சக்தி விசேஷம் **சூலினி துர்க்கை**யாகும்.

அநுபல்லவி

लोकपालिनि कपालिनि शूलिनि
लोकजननि भगमालिनि
सकृदालोकय मां सर्वसिद्धिप्रदायिके
त्रिपुराम्बिके बालाम्बिके (श्रीकमला)

சரணம்

संतप्तहेमसन्निभदेहे सदाऽखण्डैकरसप्रभावे
सन्तापहरत्रिकोणगेहे सकामेश्वरीशक्तिसमूहे
संततं मुक्तिघण्टामणिघोषायमानकवाटद्वारे
अनन्तगुरुगुहविदिते कराङ्गुलिनखोदय-
विष्णुदशावतारे अन्तःकरणेक्षुकार्मुक-
शब्दादिपञ्चतन्मात्रविशिखात्यन्तरागपाश-
द्वेषाङ्कुशधरकरे अतिरहस्ययोगिनि परे (श्रीकमला)

(இதன் பொருள்) ஹே கமலாம்பிகையே; மேலான ஸ்வரூபமுடையவளே!! மங்கள ஸ்வரூபிணியே, கையில் கிளியைத் தரித்துள்ள சாரிகையே, (சாரிகை ஒருவித ச்யாமளா) உலக மாதாவும், உலக ரக்ஷணியும், கபாலத்தையும் த்ரிசூலத்தையும் தரித்துள்ள உலக ஸம்ஹார்த்ரியாயும் விளங்குபவளே, பகமாலினியே, ஸர்வஸித்திப்பிரத சக்ரத்தின் நாயிகையான **த்ரிபுராம்பிகையே,** உருக்கிய தங்க நிறம்போன்ற சரீர காந்தியுடையவளே, ஸதா பிரவஹிக்கும்

அகண்ட ஏகரஸ ஸ்வரூபிணியே, தாபத்ரயங்களை நாசம் செய்யும் **த்ரிகோணத்தையே** ஆலயமாயுடைய வளே, காமேச்வரீ முதலிய மூன்று சக்திகளோடு கூடி விளங்குபவளே, இடையறுது எப்பொழுதும் கோஷித்துக்கொண்டுள்ள மோக்ஷ மணிகளையுடைய கத வோடு கூடிய துவாரத்தையுடையவளே, கால தேச வஸ்து பரிச்சேதமற்ற குருகுஹரால் அறியப்படுப வளே, கை விரல்களின் நகங்களினின்றும் தோன்றிய விஷ்ணுவின் தசஅவதார ஸ்வரூபிணியே, அந்தஃகரண மாகும் கரும்பு வில், சப்த ஸ்பர்சாதி தன்மாத்ர வடிவ பாணங்கள், பேராசையாதும் பாசம், த்வேஷமாகும் அங்குசம் இவைகளைத் தரித்துள்ள கரங்களையுடைய வளே, **அதி ரஹஸ்ய யோகினி** யென்னும் திருநாம முடையவளே, அடியேனை ஒரு தடவை கடைக்கண்ணுல் பார்த்து என்னை ரக்ஷிப்பாயாக.

இது எட்டாவது ஆவரணத்தைக் குறிப்பது. விளிவேற்றுமையாகும் எட்டாவது வேற்றுமைப் பதங்களால் ஆகியது. இந்தச் சக்ரத்திற்கு **ஸர்வஸித்திப்பிரத சக்ரமென்று** பெயர். இந்தச் சக்ரேச்வரிக்குத் **திரிபுராம்பா** என்று பெயர்.

**விசேஷ விமர்சம்:—** கையில் கிளியையுடைய சாரிகா ஸ்வரூபமானது **அஷ்டவித சியாமளா** பேதங்களில் ஒன்ருகும்.

கபாலம், சூலம் முதலிய ஆயுதங்களைத் தரித்துள்ள சக்தி விசேஷம் **சூலினி துர்க்கை**யாகும்.

**பகமாலினி**யென்னும் பெயரையுடைய தேவதை பதினைந்து **நித்தியா** தேவதைகளில் பதினொன்காவது தேவதை.

உருக்கிய தங்கத்தைப்போன்ற திருமேனியின் காந்தியை உடையவள் **ஸ்வர்ண காமாக்ஷி** தேவி யாகும்.

ஸ்ரீ சக்ரத்தின் மத்தியிலுள்ள **த்ரிகோண சக்ரம்**




ஆத்யாத்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம் என்னும் தாபத்ரயங்களையும் ஒழிப்பதாகும். வாஸனாக்ஷயம், மனோநாசம், தத்துவ ஞானமென்னும் மூன்றையும் ஸம காலத்தில் அருளுவது. இந்த எட்டாவது ஆவரணத்தின் தேவதைகள் **மஹா காமேச்வரி, மஹா வஜ்ரேச்வரி, மஹா பகமாலினி** என்னும் மூவராவர்.

இது மோக்ஷ மாளிகைக்குள் செல்லும் வாசற்படி போன்றது. இந்த துவாரத்தின் கதவுகளில் மணிகள் கட்டப்பட்டுள்ளன. இம்மணிகளின் ஓசையானது

"ஹே தத்துவஞானிகளே! வாருங்கள்—வாருங்கள், மோக்ஷ மாளிகைக்குள் விரைந்து செல்லுங்கள்" என்று அழைப்பதுபோல் புலப்படுகின்றது.

பரதேவதையின் கை விரல்களின் நகங்களினின்றும் மஹாவிஷ்ணுவின் பத்து அவதாரங்கள் தோன்றின. कराङ्गुलिनखोत्पन्ननारायणदशाकृतिः என்பது இதற்குப் பிரமாணமாம்.

**அதிரஹஸ்ய யோகினிகளென்பது** எட்டாவது ஆவரண தேவதைகளின் ஸமஷ்டி நாமமாகும்.

**ஒன்பதாவது ஆவரண கீர்த்தனை**

ராகம்:– ஆஹிரி தாளம்:- ரூபகம்

பல்லவி

श्रीकमलाम्बा जयति अम्बा श्रीकमलाम्बा जयति
जगदम्बा श्रीकमलाम्बा जयति शृङ्गाररसकदम्बा
मदम्बा श्रीकमलाम्बा जयति
चिद्बिम्बप्रतिबिम्बेन्दुबिम्बा श्रीकमलाम्बा जयति
श्रीपुरबिन्दुमध्यस्थचिन्तामणिमन्दिरस्थ-
शिवाकारमञ्चस्थितशिवकामेशाङ्कस्था (श्रीकमला)

அநுபல்லவி

सूकराननाद्यर्चितमहात्रिपुरसुन्दरीं
राजराजेश्वरीं सुवासिनीं
श्रीकरसर्वानन्दमयचक्रवासिनीं चिन्तयेऽहम्

दिवाकरशीतकिरणपावकादिविकासपरया
भीकरतापत्रयादिभेदनधुरीणतरया
पाकरिपुप्रमुखादिप्रार्थितसुकळेबरया
प्राकट्यपरापरया पालितो दयाकरया (श्रीकमला)

சரணம்

श्रीमात्रे नमस्ते चिन्मात्रे सेवितरमाहरीशविधात्रे
वामादिशक्तिपूजितपरदेवतायाः सकलं जातं
कामादिद्वादशभिरुपासितकादि-हादि-सादिमन्त्ररूपिण्याः
प्रेमास्पदशिवगुरुगुहजनन्यां प्रीतियुक्तमच्चित्तं विलयतु
ब्रह्ममयप्रकाशिनि नामरूपविमर्शिनि
कामकलाप्रदर्शिनि सामरस्यनिदर्शिनि (श्रीकमला)

(இதன் பொருள்) 1-ம் வேற்றுமை :—ஸ்ரீ கமலாம்பிகை நன்கு விளங்குகிறுள். அம்பிகையாயும், லோக மாதாவாயும், சிருங்காரரஸக் கொத்தாயும் (கூட்டமாயும்) அடியேனது தாயாருமாயுமுள்ள **ஸ்ரீ கமலாம்பாள்** ஸர்வோத்கிருஷ்டமாய் விளங்குகிறுள். சித்ரூபமான பிம்பத்தின் பிரதிபிம்பமான சந்திரபிம்பத்தை யொத்த **கமலாம்பா** நன்கு விளங்குகிறுள். ஸ்ரீபுர மத்தியில் விளங்கும் சிந்தாமணி மந்திரத்தின் நடுவில் விளங்கும் பிரஹ்மா முதலிய காரியகர்த்தாக்கள் மயமான மஞ்சத்தின்மேல் வீற்றிருக்கும் ஸ்ரீ காமேச்வருடைய (இடது) தொடையில் அமர்ந்துள்ள **ஸ்ரீ கமலாம்பா** சிறப்பாய் விளங்குகிறுள்.

2-ம் வேற்றுமை :—வாராஹீ முதலிய சக்திகளால் அதாவது தண்டநாதை, மந்த்ரிணீ முதலிய சக்திகளால் துதிக்கப்பட்டவளும், முக்தியை நல்கும் ஸர்வாநந்தமயமென்னும் பிந்து சக்கிரவாஸினியும் நித்தியமங்களஸ்வரூபிணியும், ராஜராஜேச்வரியுமான ஸ்ரீ மஹாத்ரிபுரஸுந்தரியை நான் தியானிக்கிறேன்.

3-ம் வேற்றுமை :—சூர்யன், சந்திரன், அக்கினி முதலிய ஜடப்பிரகாசப் பொருள்களைப்பிரகாசிப்பிக்கின்றவளும், பயங்கரமான தாபத்ரயங்களை ஒழிப்பதில் மிகுந்த ஸாமர்த்தியமுடையவளும், இந்திரன் முதலிய பிரமுகர்களால் தியானிக்கப்பட்ட அழகிய திவ்ய சரீரமுடையவளும், பிரகடயோகினி முதல் பராபராதி ரஹஸ்யயோகினி வரையுள்ள ஒன்பது யோகினீ ஸ்வரூபமுடையவளும் ஆன கருணா ஸமுத்திரத்தால் (அடியேன்) ரக்ஷிக்கப்பட்டேன்.

4-ம் வேற்றுமை ;— மஹாலக்ஷ்மி, விஷ்ணு, ருத்திரன், நான்முகன் இவர்களால் துதிக்கப்பட்டவளும், ஞானஸ்வரூபிணியும் ஆன தாயாருக்கு நமஸ்காரம்.

5-ம் வேற்றுமை :—வாமா முதலிய சக்திகளால் பூஜிக்கப்பட்ட பரதேவதையினிடமிருந்து யாவும் தோன்றின.

6-ம் வேற்றுமை :— மன்மதன் முதலிய பன்னிருவரால் உபாஸிக்கப்பட்ட காதிவித்யை, ஹாதிவித்யை ஸாதிவித்யை இவற்றின் ஸ்வரூபிணியான சித்சக்தியின் அருளுக்குப்பாத்திரமான (7-ம் வேற்றுமை)

குருகுஹ ஜனனியிடம் அன்புடைய எனது மனம் நன்கு லயிக்கட்டும்.

8-ம் வேற்றுமை:— பிரஹ்மமயமான பிரகாச ஸ்வரூபிணியே! நாமரூபப்பிரபஞ்சத்தின் விமர்ச ஸ்வரூபிணியே! காமகலாவடிவத்தைக் காட்டி யருள் பவளே! சிவசக்தி ஐக்கிய ஸாமரஸ்யத்தில் நன்கு விளங்குபவளே! (என் மனம் லயிக்கட்டும்.)

இது ஒன்பதாவது ஆவரண கீர்த்தனை. இதில் எட்டு வேற்றுமைகளும் இருக்கின்றன. இதிலும் பர தேவதையின் ஸகுண ஸாகாரம், ஸகுண நிராகாரம், நிர்க்குணம், ஸ்ரீ சக்ரஸம்பந்தம் முதலிய நாமாக்கள் உள்ளன. இந்த ஒன்பதாவது ஆவரண சக்ரத்திற்கு ஸர்வாநந்தமய சக்ரமென்று பெயர். இதிலுள்ள யோகினி பராபராதி ரஹஸ்யயோகினியாகும். மஹாத்ரிபுரஸுந்தரி இந்தச் சக்ரேச்வரியாகும்.

விசேஷ விமர்சம்:—

| | | |
|---|---|---|
| १. श्रीकमलाम्बा जयति | – प्रथमा | विभक्तिः |
| २. महात्रिपुरसुन्दरीं चिन्तयेऽहम् | – द्वितीया | ,, |
| ३. विकासपरया प्राकट्यपरापरया पालितः | – तृतीया | ,, |
| ४. चिन्मात्रे नमस्ते | – चतुर्थी | ,, |
| ५. परदेवतायाः सकलं जातं | – पञ्चमी | ,, |
| ६. कादिहादिसादिमन्त्ररूपिण्याः प्रेमास्पद | – षष्ठी | ,, |
| ७. शिवगुरुगुहजनन्यां मच्चित्तं विलयतु | – सप्तमी | ,, |

௮. ब्रह्ममयप्रकाशिनि, नामरूपविमर्शिनि,
कामकलाप्रदर्शिनि, सामरस्यनिदर्शिनि – सं. प्र. विभक्तिः
(விளிவேற்றுமை)

**ஸகுண ஸாகாரம் :—**

शृङ्गाररसकदम्बा, सूकराननाद्यर्चितमहात्रिपुरसुन्दरी, राजराजेश्वरी, सुवासिनी, पाकरिपुप्रमुखादिप्रार्थितसुकळेबरा, दयाकरा, सेवितरमाहरीशविधात्री, शिवगुरुगुहजननी ।

**ஸகுண நிராகாரம் :—**

जगदम्बा, दिवाकरशीतकिरणपावकादिविकासपरा, भीकरतापत्रयादिभेदनधुरीणतरा ।

**நிர்க்குணம் :—**

ब्रह्ममयप्रकाशिनी, नामरूपविमर्शिनी, सामरस्यनिदर्शिनी ।

**ஸ்ரீசக்ரஸம்பந்தமானவை :—**

चिद्बिम्बप्रतिबिम्बेन्दुबिम्बा, श्रीपुरबिन्दुमध्यस्थचिन्तामणिमन्दिरस्थशिवाकारमञ्चस्थितशिवकामेशाङ्कस्था, श्रीकरसर्वानन्दमयचक्रवासिनी, प्राकट्यपरापरा, कादिहादिसादिमन्त्ररूपिणी ।

*காமகலை :— பிரகாசரூபப் பிரஹ்மம் — பிம்பம். இது சித்சக்தியாகும் சுத்தமான கண்ணாடியில் பிரதிபலித்து* **காமகலை***யாகின்றது. இது பரா காமகலை. சித்சக்தியில் உள்ள பிரஹ்மப் பிரதிபிம்பம் ஜடசக்தியாகிய மாயையில் பிரதிபலித்த பிந்துப் பிரதிபிம்பம் அபரா காமகலையாகும். அபரா காமகலையே ஜகத் காரணம்.*

திவாகர, சீதகிரண பாவகர்களாகும் ஸூர்யன் சந்திரன், அக்கினி—இவர்கள் ஜடவொளிகள். இவை तस्य भासा सर्वमिदं विभाति என்னும் பிரமாணப்படி சித் சக்தியின் ஸ்வயம்பிரகாசத்தால் பிரகாசிக்கின்றன.

வாமா, ஜ்யேஷ்டா, ரௌத்ரீ முதலிய சக்திகள் முறையே நான்முகப்பிரஹ்மா, விஷ்ணு, ருத்ரர்களின் சக்திகள்—சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரகாரியங்களை இயற்ற வல்லவர்கள்.

பிரஹ்மவித்யையாகும் ஸ்ரீவித்யையை உபாஸித்தவர்கள் பன்னிருவராவர்—அவர்கள்;

| | | |
|---|---|---|
| 1. மன்மதன் | 5. அகஸ்தியர் | 9. துர்வாஸர் |
| 2. விஷ்ணு | 6. நந்திகேச்வரர் | 10. குஹன் |
| 3. சிவன் | 7. சந்திரன் | 11. மநு |
| 4. லோபாமுத்ரை | 8. குபேரன் | 12. குபேரன் |

முதலியவராவர். இவர்கள் பன்னிருவராலும் உபாஸிக்கப்பட்ட வித்யைகள்–காதி–ஹாதி–ஸாதி யென்பவையாகும். இவ்வித்யைகளின் ஸ்வரூபம் அதிரஹஸ்யமானது. குருமுகமாகவே அறியத்தக்கவை.

### மங்கள கீர்த்தனம்.

ராகம்:– ஸ்ரீராகம் தாளம்:- கண்ட ஏகதாளம்

பல்லவி

श्रीकमलाम्बिके शिवे पाहि मां

ललिते श्रीपतिविनुते सितासिते शिवसहिते (श्रीकमला)

राकाचन्द्रमुखि रक्षितकोलमुखि
रमावाणीसखि राजयोगसुखि
शाकम्भरि शातोदरि चन्द्रकलाधरि
शंकरि शंकरगुरुगुहभक्तवशंकरि
एकाक्षरि भुवनेश्वरि ईशप्रियकरि
सुखकरि श्रीमहात्रिपुरसुन्दरि (श्रीकमला)

(இதன் பொருள்) ஹே லலிதையே, லக்ஷ்மீபதியாகும் மஹாவிஷ்ணுவால் ஸேவிக்கப்பட்டவளே, வெண்மையும் கறுப்புங் கலந்த நிறமுடையவளே, சிவனோடு கூடி விளங்குபவளே, பௌர்ணமி சந்திரனைப்போன்ற முகமுடையவளே, ரக்ஷிக்கப்பட்ட மஹாவாராஹியை உடையவளே, லக்ஷ்மீ ஸரஸ்வதிகளைத் தோழிகளாக உடையவளே, ராஜயோக ஸமாதியில் உணரப்படும் ஆநந்தமே, சாகம்பரியென்னும் சக்தியாய் விளங்குபவளே, க்ருசமான (மெல்லிய) வயிற்றையுடையவளே, சிரஸில் சந்திரகலையைத் தரித்துள்ளவளே, ஜீவர்கட்குச் சுகத்தையருள்பவளே, சிவ குருவாக விளங்கும் குஹனுடைய பக்தர்களுக்கு வசமாயிருப்பவளே, ஏக (ஒரு) பீஜ மந்த்ரரூபமான புவனேச்வரி ஸ்வரூபிணியே, பரமசிவனுக்குப் பிரியமாயும் ஸுகத்தை யளிப்பவளாயும் உள்ளவளே, ஸர்வமங்கள ஸ்வரூபிணியாயுள்ள ஸ்ரீ கமலாம்பிகையே என்னைக் காப்பாற்றுவாயாக.

இது மங்கள கீர்த்தனம். இதனை கற்பூர நீரா

ஜனம்செய்யும்போதும் சொல்லலாம். இதில் காமகலா ஸ்வரூபிணியான ஸ்ரீ கமலாம்பிகையைப் பல நாமங்களால் ஸம்போதனம்செய்து, தன்னை ரக்ஷிக்கும்படி வேண்டிக்கொள்ளுகின்றனர்.

சிவே, ஸ்ரீபதிவிநுதே, ஸிதாஸிதே, சிவஸஹிதே, ராகாசந்த்ரமுகி, ரக்ஷிதகோலமுகி, ரமாவாணீஸகி, ராஜயோகஸுகி, சாகம்பரி, சாதோதரி, சந்த்ரகலாதரி, சங்கரி, சங்கர குருகுஹ பக்தவசங்கரி, ஏகாக்ஷரி, புவனேச்வரி, ஈசப்ரியகரி, ஸ்ரீகரி, ஸுககரி, ஸ்ரீ மஹாத்ரிபுரஸுந்தரி—என்னும் நாமாக்கள் பரதேவதையின் மஹிமையையும் ஸகுண நிர்க்குண ஸ்வரூபங்களையும் தெரிவிக்கின்றன.

राजयोगसुखी

ராஜயோகமாகும் ஸமாதி நிலையில் ஆநந்தமாய் ஸ்புரிப்பவள்—**இந்நிலைதான் ஸ்ரீ வித்யையாகும் பிரஹ்மவித்யையின் பரம காஷ்டையாகுமென்பது பெரியோர்களின் அநுபவமாகும்.** இத்தகைய பேராநந்த ஸ்வரூபிணியாகிய ஸ்ரீ கமலாம்பிகை சிவகுருவாகிற ஸ்ரீ குஹப்பெருமானது பக்தர்களின் வசமாயிருக்கிருள். குஹையாகும் **தஹராகாசத்தில்** ஸ்வயம்பிரகாசமாய் விளங்குபவன் **குஹன்.** ஆதலின் **தஹரோபாஸக** துரந்தரர்களின் ஸ்வாநுபவமே ஆநந்தமாகும். இது முக்காலத்திலும் அழிவற்றது. ஸ்ரீ யென்னும் மோக்ஷம் இதுவேயாகும். இங்ஙனம் இதுகாறும் விமர்சித்து வந்த நவாவரண கீர்த்தனைகளாலும்,

தியானகீர்த்தனம், மங்களகீர்த்தனம் இவைகளாலும் ஸ்ரீ கமலாம்பிகையின் அசிந்திய மஹிமை அறியப்படுகின்றதல்லவா ?

சித்சக்தியாகும் ஸ்ரீ கமலாம்பிகையே காமகலே, பாலே, லலிதை, ராஜராஜேச்வரி, மஹாத்ரிபுரஸுந்தரி, பராபட்டாரிகை, சியாமளே, மஹாவாராஹி, புவனேச்வரி, ஸ்ரீ சண்டிகாபரமேச்வரி, முதலிய நாமாக்களால் கூறப்படுகின்றனளென்பது பஹ்வ்ருசோபநிஷத்தில் கூறப்பட்டுள்ளதென்பது முன்னரே விமர்சிக்கப்பட்டுள்ளது. அஞ்ஞானம், அவித்யை இவைகளே யறவே நாசம்செய்து தேவதைகளாகும் முமுக்ஷுக்களுக்கு அநுக்கிரஹம் செய்வதற்கே சித்சக்தி அவ்வப்போது லலிதை, சண்டிகை, புவனேச்வரி முதலிய நாமாக்களேத் தாங்கி ஆவிர்ப்பவித்தனளென்பது ஸ்ரீ லலிதோபாக்யானம், **மார்க்கண்டேய புராணம், தேவீபாகவதம்** முதலிய புராணங்களில் மிகப்பிரசித்தமாகக் கூறப்பட்டுள்ளது.

இவ்விஷயம், ஸ்ரீ சங்கரபகவத்பாத பரமாசார்யாளுக்குப் பரமகுருவான ஸ்ரீ கௌடபாதாசார்யாளால் தாமியற்றியருளிய ஸ்ரீ வித்யாரத்ன ஸூத்ரங்களில் கூறப்பட்டுள்ளது.

सा भगवती जगत् सृष्ट्वेदं तस्मिन् देवादीनुत्पाद्य, तेषामनुग्रहाय, स्वभक्तानां पुरुषार्थाय, भण्डासुरादिहरणायापि च या ब्रह्मणः स्वप्रकाशा चित् देवीरूपेणाभिव्यक्ता सती धर्मसंस्थापनार्थाय ।

ततश्चानेकरूपेण पश्चान्मरीच्यादयोऽभिव्यक्ताः। तेषां ज्ञानैश्वर्यबलवीर्य-तेजोभिः सदा संपन्नत्वमिति यावत्। तस्य तारतम्येनादौ विश्वकर्मणा दुग्धोदधिमध्यस्थितमणिद्वीपस्थं चतुर्विंशतिवप्रविशिष्टं चिन्तामणिमन्दिरं कल्पयित्वा ततस्तत्र चित्प्रकाशमेव तां देवीं प्रतिष्ठाप्य पश्चादनेक-शक्तयः पुरोवर्तिन्यः स्थिताः ता आम्नायत्वसंज्ञया तन्मन्दिरस्य ऋग्वेदादिमयचतुर्द्वारे वक्ष्यमाणे स्थापिताश्च नियमिताः॥

(இதன்பொருள்) ஸாக்ஷாத் சித்சக்தியாகும் பிரஹ்மசக்தியானது இந்த ஜகத்தைச் சிருஷ்டிசெய்து இதில் தேவர்களேயும் மனிதர்களேயும் சிருஷ்டித்து இவர்களுக்கு அநுக்கிரஹம் செய்வதற்காகவும் அஞ்ஞானஸ்வரூபர்களான பண்டாஸுரன், மஹிஷாஸுரன் முதலியவர்களே நாசம்செய்து தேவர்களும் முமுக்ஷுக்களும் முக்கிய புருஷார்த்தமாகிய மோக்ஷத்தையடையும் பொருட்டும், தர்மஸ்தாபனம் செய்யும் பொருட்டும் தேவீரூபத்தோடு ஆவிர்ப்பவித்தனள். பிறகு தனது கிரணவடிவமாய் அநேக சக்திகளாக ஆவிர்ப்பவித்தனள். ஆதியாகும் சித்சக்தியே பிரஹ்மசக்தி. ஜகத்சிருஷ்டிக்குமுன் இந்தச் சித்தே கமலே அல்லது காமகலேயெனக் கூறப்படுகின்றனள். பிறகு த்ரிபுரஸுந்தரியெனக் கூறப்படுகின்றனள். இருபத்துநான்கு கோட்டைகளோடு கூடிய ஸ்ரீ நகரம் திருப்பாற் கடலின் மத்தியில் தேவ சில்பியாகும் விச்வகர்மாவால் கற்பிக்கப்பட்டு அதன் மத்தியிலுள்ள சிந்தாமணி மந்திரத்தில் ஸ்ரீ சக்ர

மத்தியில் பஞ்சப்பிரஹ்ம மஹாமஞ்சத்தில் பரப்பிரஹ்மமாகும் ஸ்ரீ காமேச்வரனது இடது தொடையில் வீற்றிருக்கிறாள். இந்த சிந்தாமணி மந்திரத்தின் நான்கு துவாரங்களும் நான்கு வேதமயமானவை. எண்ணிறந்த சக்திகள் மூல சக்தியைத் தரிசனம் செய்து கொண்டு சுற்றிலும் விளங்குகின்றனர்...என்பதாம்.

இதுகாறும் நாம் விமர்சித்துவந்த ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் அவர்கள் இயற்றியருளிய நவாவரண கீர்த்தனைகளின் உபஸம்ஹாரம் செய்யப்படுகின்றது. தியான கீர்த்தனம், மங்கள கீர்த்தனம் உள்பட நவாவரண கீர்த்தனைகள் யாவும் ஸ்ரீ வித்யையின் பாஹ்ய, ஆந்தர உபாஸ்தியின் முறைகளையும், ஸ்ரீசக்கிரத்தின் அமைப்பையும் அதில் அந்தர்கதமான ஒன்பது ஆவரண சக்கிரங்களையும் அதன் சக்திகளையும் நன்கு விளக்குகின்றன. ஸ்ரீ வித்யாதீக்ஷையைப் பெற்றோ அல்லது ஸ்ரீ வித்யையின் உபதேசத்தைப் பெற்றோ ஸாதகர்கள், மூலமந்த்ர ஜபம் செய்துகொண்டு பக்தி சிரத்தையுடன் அர்த்தாநுஸந்தானத்தோடு கீர்த்தனைகளைக் கானம் செய்வார்களேயாயின் ஸ்ரீமான் தீக்ஷிதர் அவர்களின் அநுக்கிரஹத்திலும் பரதேவதையாகும் ஸ்ரீ கமலாம்பிகையின் பிரஸாதத்தினாலும் ஸகல செல்வயோகமிக்க பெருவாழ்வெய்திச் சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகிய பேரின்பவாழ்வும் பெறுவாரென்பது திண்ணம்.

ஸ்ரீ வித்யோபாஸ்தியின் ஸகல ரஹஸ்யங்களையும் கரதலாமலகம்போல் விளக்கியுணர்விப்பன ஸ்ரீ தீக்ஷி

தரவர்களின் நவாவரண கீர்த்தனைகள் என்று கூறுவது மிகையாகாது. ஒன்பது ஆவரணங்களின் சக்கிரேச்வரீ மந்த்ரங்களைக் குருமுகமாக உணர்ந்து ஜபம் செய்துகொண்டு கீர்த்தனைகளைப் பாடினால் ஸகல விதமான ஐஹிக ஆமுஷ்மிக பலங்களையும் பெறுவார்கள். இது பரதேவதையின் சாஸனம். சிவம்.

**ஸ்ரீ நவாவரண கீர்த்தன விமர்சம் முற்றிற்று.**

ஸ்ரீ தீக்ஷிதர் இயற்றியருளிய ஸ்ரீபுர கமலாம்பிகா

# நவாவரண கீர்த்தனைகள்

---

## தியான கீர்த்தனம்

ராகம்; தோடி தாளம்: ரூபகம்

பல்லவி

கமலாம்பிகே ஆஶ்ரிதகல்பலதிகே சண்டிகே
கமனீயாருணாம்ஶுகே கரவித்ருதஶுகே
மாமவ கமலாம்பிகே ஜகதம்பிகே.

அநுபல்லவி

கமலாஸனாதி பூஜித கமலபதே பஹுவரதே
கமலாலய தீர்த்தவைபவே ஶிவே கருணார்ணவே.
(கமலா)

சரணம்

ஸகலலோக நாயிகே ஸங்கீதரஸிகே
ஸுகவித்வ ப்ரதாயிகே ஸுந்தரி கதமாயிகே
விகளேபர முக்திதானநிபுணே அகஹரணே
வியதாதி பூதகிரணே விநோதசரணே அருணே
ஸகளே குருகுஹகரணே ஸதாஶிவாந்த:கரணே
அ க ச ட த பாதி வர்ணே அகண்டைகரஸ
பூர்ணே. (கமலா)

## முதலாவது ஆவரண கீர்த்தனே

(1வது வேற்றுமை)

ராகம்: ஆனந்தபைரவி  தாளம்: திரிபுடை

பல்லவி

கமலாம்பா ஸம்ரக்ஷது மாம் ஸ்ரீஹ்ருத்கமலநகர
நிவாஸிநீ

அநுபல்லவி

ஸுமநஸாராதிதாப்ஜமுகீ ஸுந்தரமந :ப்ரியஸகீ
கமலஜானந்த போதஸுகீ காந்தாதார பஞ்ஜரஶுகீ

சரணம்

த்ரிபுராதிசக்ரேஶ்வரீ அணிமாதிஸித்தீஶ்வரீ
நித்யகாமேஶ்வரீ
க்ஷிதிபுரத்ரைலோக்ய மோஹநசக்ரவர்த்திநீ
ப்ரகடயோகிநீ
ஸுரரிபு மஹிஷாஸுராதிமர்திநீ
நிகமபுராணாதி ஸம்வேதிநீ
த்ரிபுரேஶீ குருகுஹ ஜனனீ த்ரிபுரபஞ்ஜன ரஞ்ஜநீ
மதுரிபுஸஹோதரீ தலோதரீ த்ரிபுரஸுந்தரீ
மஹேஶ்வரீ. (கமலா)

---

## இரண்டாவது ஆவரண கீர்த்தனே

(2வது வேற்றுமை)

ராகம்: கல்யாணி  தாளம்: ஆதி

பல்லவி

கமலாம்பாம் பஜரே ரே மானஸ
கல்பித மாயா கார்யம் த்யஜ ரே.

அநுபல்லவி

கமலாவாணீ ஸேவிதபார்ஸ்வாம் கம்புஜயக்ரீவாம்
நததேவாம்
கமலா புரஸதனும் ம்ருதுகதனும் கமனீயரதனும்
கமலவதனும். (கமலா)

சரணம்

ஸர்வாஶாபரிபூரக சக்ரஸ்வாமினீம் பரமசிவகாமினீம்
துர்வாஸார்ச்சிதகுப்தயோகினீம் துஃக்கத்வம்ஸினீம்
ஹம்ஸினீம்
நிர்வாணநிஜஸுகதாயினீம் நித்யகல்யாணீம்
காத்யாயனீம்
ஶர்வாணீம் மதுபவிஜயவேணீம் ஸத்குருகுஹஜநநீம்
நிரஞ்ஜனீம் கர்விதபண்டாஸுரபஞ்ஜநீம் காமா
கர்ஷிண்யாதி ரஞ்ஜநீம்
நிர்விஶேஷசைதன்யரூபிணீம் உர்வீதத்வாதி
ஸ்வரூபிணீம். (கமலா)

---

## மூன்ருவது ஆவரண கீர்த்தனை

(3வது வேற்றுமை)

ராகம்: சங்கராபரணம் தாளம்: ரூபகம்

பல்லவி

ஶ்ரீ கமலாம்பிகயா கடாக்ஷிதோஹம்
ஸச்சிதானந்த பரிபூர்ண ப்ரஹ்மாஸ்மி.

அநுபல்லவி

பாகஶாஸனாதி ஸகல தேவதா ஸேவிதயா
பங்கஜாஸனாதி பஞ்சகிருத்யகிருத் பாவிதயா

ஶோகஹரண சதுரபதயா மூகமுக்யவாக்ப்ரதயா
கோகநத விஜயபதயா குருகுஹ தத்ரைபதயா.

(ஸ்ரீ கமலா)

சரணம்

அநங்ககுஸுமாத்யஷ்ட ஶக்த்யா காரயா
அருணவர்ண ஸம்க்ஷோபண சக்ரா காரயா
அநந்த கோட்யண்ட நாயக ஶங்கர நாயிகயா
அஷ்டவர்காத்மக குப்ததரயா வரயா
அநங்காத்யுபாஸிதயா அஷ்டதளாப்ஜஸ்திதயா
தநுர் பாண தரகரயா தயாஸுதாஸாகரயா.

(ஸ்ரீகமலா)

---

## நான்காவது ஆவரண கீர்த்தனை

(4வது வேற்றுமை)

ராகம் : காம்போதி தாளம் : அடதாள

பல்லவி

கமலாம்பிகாயை கநகாம்ஶுகாயை
கர்பூரவீடிகாயை நமஸ்தே நமஸ்தே.

அநுபல்லவி

கமலாகாந்தானுஜாயை காமேஶ்வர்யை அஜாயை
ஹிமகிரிதநுஜாயை ஹ்ரீம்கார பூஜ்யாயை
கமலாநகரவிஹாரிண்யை கலஸமூஹஸம்ஹாரிண்யை
கமநீயரத்ன ஹாரிண்யை கலிகல்மஷ
பரிஹாரிண்யை. (கமலா)

சரணம்

ஸகலஸௌபாக்யதாயகாம்போஜசரணாயை
ஸம்க்ஷோபிண்யாதி ஶக்தியுத சதுர்த்தாவரணாயை
ப்ரகடசதுர்தச புவந பரணாயை
ப்ரபலகுருகுஹ ஸம்ப்ரதாயாந்த: கரணாயை
அகளங்க ரூப வர்ணாயை அபர்ணாயை
ஸுபர்ணாயை ஸுகரத்ருத சாபபாணாயை
ஶோபநகரமநுகோணாயை ஸகுங்குமாதி லேபநாயை
சராசராதி கல்பநாயை சிகுரவிஜிதநீலகநாயை
சிதாநந்த பூர்ணகநாயை. (கமலா)

---

## ஐந்தாவது ஆவரண கீர்த்தனை

(5வது வேற்றுமை)

ராகம்: பைரவி தாளம்: ஜம்பை

பல்லவீ

ஸ்ரீகமலாம்பிகாயா: பரம் நஹி ரே ரே சித்த
க்ஷித்யாதி சிவாந்த தத்வஸ்வரூபிண்யா; (ஸ்ரீகமலா)

அநுபல்லவி

ஸ்ரீகண்ட விஷ்ணு விரிஞ்சாதி ஜநயித்ரியா:
ஶிவாத்மக விஶ்வகர்த்ரியா: காரயித்ரியா:
ஸ்ரீ கர பஹிர்தஶார சக்ர ஸ்திதியா:
ஸேவித பைரவீ பார்கவீ பாரத்யா: (ஸ்ரீகமலா)

சரணம்

நாதமய ஸூக்ஷ்மரூப ஸர்வஸித்திப்ரதாதி தஶ
ஶக்த்யாராதித மூர்தே: ஶ்ரோத்ராதி தஶ கரணாத்மக

குலகௌளிகாதி பஹுவிதோபாஸித கீர்த்தே:
அபேத நித்ய ஶுத்த புத்த முக்த ஸச்சிதாநந்த
பரமாத்வைத ஸ்பூர்த்தே: ஆதிமத்யாந்தரஹிதா
ப்ரமேய குருகுஹமோதித ஸர்வார்த்த ஸாதகபூர்த்தே:
மூலாதி நவாதாரவ்யாவ்ருத்த தஶத்வனிபேதஜ்ஞ
யோகிப்ருந்த ஸம்ரக்ஷண்யா: அநாதி மாயாவித்யா
கார்யகாரண விநோத ஹரணபடுதர கடாக்ஷ
வீக்ஷண்யா: (ஸ்ரீகமலா)

---

## ஆறுவது ஆவரண கீர்த்தனை

(6வது வேற்றுமை)

ராகம்: புன்னாகவராளி — தாளம்: ரூபகம்

பல்லவி

கமலாம்பிகாயாஸ்தவ பக்தோஹம்
சங்கர்யா: ஸ்ரீகர்யா: ஸங்கீத ரஸிகாயா:

அநுபல்லவி

ஸுஶரேக்ஷு கோதண்ட பாஶாங்குஶ பாண்யா:
அதிமதுரதரவாண்யா: ஶர்வாண்யா: கல்யாண்யா:
ரமணீய புந்நாகவராளி விஜிதவேண்யா: (ஸ்ரீகமலா)

சரணம்

தஶகலாத்மக வஹ்னிஸ்வரூப ப்ரகாஶாந்தர்
தஶார ஸர்வரக்ஷாகர சக்ரேஶ்வர்யா:
த்ரிதஶாதிநுத க- ச- வர்கத்வய ஸர்வஜ்ஞாதி
தஶ ஶக்தி ஸமேத மாலிநீ சக்ரேச்வர்யா:
த்ரிதஶ விம்ஶதி வர்ணகர்பிணீ குண்டலிந்யா:

தஶமுத்ரா ஸமாராதித கௌளிங்யா :
தஶரதாதிநுத குருகுஹ ஜனக ஶிவபோதிங்யா ;
தஶகரணவிருத்தி மரீசிநிகர்ப யோகிங்யா : (ஸ்ரீகமலா)

---

## ஏழாவது ஆவரண கீர்த்தனே

(7வது வேற்றுமை)

ராகம் : ஸஹாநா தாளம் : த்ரிபுட

பல்லவி

ஸ்ரீகமலாம்பிகாயாம் பக்திம் கரோமி [யாம்.
ஶ்ரிதகல்ப வாடிகாயாம் சண்டிகாயாம் ஜகதம்பிகா

அநுபல்லவி

ராகா சந்த்ரவதநாயாம் ராஜீவநயநாயாம்
பாகாரிநுதசரணாயாம் ஆகாஶாதிகிரணாயாம் [யாம்
ஹ்ரீம்காரவிபிந ஹரிண்யாம் ஹ்ரீம்கார ஸஶரீரிண்
ஹ்ரீம்கார தருமஞ்ஜர்யாம் ஹ்ரீம்காரேஶ்வர்யாம்
கௌர்யாம். (ஸ்ரீகமலா)

சரணம்

ஶரீரத்ரய விலக்ஷண ஸுகதரஸ்வாத்மாநுபோகிங்யாம்
விரிஞ்சிஹரீசாந ஹரிஹயவேதித ரஹஸ்யயோகிங்யாம்
பராதிவாக்தேவதா ரூபவஶிங்யாதி விபாகிங்யாம்
சராத்மக ஸர்வரோகஹர நிராமய ராஜயோகிங்யாம்
கரத்ருத வீணாவாதிங்யாம் கமலாநகர விநோதிங்யாம்
ஸுரநரமுநிஜன மோதிங்யாம் குருகுஹ வர
ப்ரஸாதிங்யாம். (ஸ்ரீகமலா)

---

ப்ரேமாஸ்பதஶிவகுருகுஹஜநந்யாம் ப்ரீதியுக்த
மச்சித்தம் விலயது
ப்ரஹ்மமயப்ரகாஶிநி நாமரூபவிமர்ஶிநி
காமகலாப்ரதர்ஶிநி ஸாமரஸ்யநிதர்ஶிநி. (ஸ்ரீ கமலா)

---

## மங்கள கீர்த்தனம்

**ராகம் : ஸ்ரீராகம்** **தாளம் : கண்ட ஏகதாளம்**

பல்லவி

ஸ்ரீ கமலாம்பிகே ஶிவே பாஹி மாம்
லலிதே ஸ்ரீ பதிநுதே ஸிதாஸிதே ஶிவஸஹிதே
(ஸ்ரீ கமலா)
ராகாசந்த்ரமுகி ரக்ஷிதகோலமுகி
ரமாவாணீஸகி ராஜயோகஸுகி
ஶாகம்பரி ஶாதோதரி சந்த்ரகலாதரி
ஶங்கரி ஶங்கர குருகுஹ பக்தவஶங்கரி
ஏகாக்ஷரி புவநேஶ்வரி ஈஶப்ரியகரி ஸ்ரீகரி
ஸுககரி ஸ்ரீ மஹாத்ரிபுரஸுந்தரி (ஸ்ரீ கமலா)

**நவாவரண கீர்த்தனைகள் முற்றிற்று.**

ஆனந்த வாழ்வை அளிக்க வல்ல

அற்புத

# ஸ்ரீசக்ரம்



பிந்து - திரிகோண - வஸுகோண - தசாரயுக்ம
மன்வச்ர - நாகதள - ஸம்யுத - ஷோடசாரம்।
வ்ருத்தத்ரயஞ்ச தரணி ஸதன - த்ரயஞ்ச
ஸ்ரீசக்ர - மேத - துதிகம் - பரதேவதாயா:॥

- பொய்யாமொழி